
பதிவு எண் 2041. மஹாத்மா காந்தி வாழ்க. தனிப்பிரதி விலை அணா ஒன்று




| | ரூ. அ. |
|---|---|
| வருட சந்தா ... ... ... | 3—0 |
| 6 மாத சந்தா ... ... ... | 1–12 |

[வாரப்பதிப்பு.]
ஆசிரியர்
ஈ. வெ. இராமசாமி நாயக்கர்.

வெளி நாட்ட...
விளம்பரம் ...

மாலை 2 | ஈரோடு, அக்ஷய-ஹு ஆடி-மீ 31-உ (15—8—26) ஞாயிற்றுக்கிழமை. | மலர் 16.


## உண்மையான கதர்

கேட்டியான கதர்!

கதர் வாங்குகிறவர்கள் விலையை கவனிப்பதுடன் சரக்கு அழுத்தத்தையும், நயத்தையும், கெட்டியையும் கவனிக்கவேண்டியது முக்கியமான கடமை. தமிழ் நாடுகாங்கிரஸ் கதர் போர்டாரின் உதவியாலும் மேற்பார்வையாலும், அத்தாட்சி பத்திரத்துடன் நடைபெறுகின்றது கதர் போர்டாரின் விலைக்கே விற்கப்படும்.

(காங்கிரஸ் அத்தாட்சிப் பத்திரம்.

ஸ்ரீ காந்தி கதராலயத்தார் கை நூலால், கைத் தரியால் தயார் செய்யப்பட்ட உண்மையான கதர் உற்பத்தி செய்து நியாயமான விலைக்கு விற்கிறார்கள். எஸ். ராமநாதன்,
காங்கிரஸ் கதர் போர்டு காரியதரிசி.

விலாசம்:—ந. ராமசாமி. மானேஜர்,
ஸ்ரீ காந்தி கதராலயம், திருப்பூர்.

## கதர்! கதர்!! கதர்!!!

தமிழ் நாடு கதர் போர்டாரால்
அத்தாக்ஷி பத்திரம் பெற்ற

## சுத்த கதர் ஜவுளிகள்.

வெள்ளை பீஸ்கள், வேஷ்டிகள், துண்டுகள், துவால்கள், சால்வைகள், அச்சு துண்டுகள். பலரகம் வெள்ளை கலர் கோட்டிங்குகள், சீட்டிகள் எல்லா ரகங்களும் கைவசம் இருப்பிலிருக்கின்றன. விலை சாப்தாவுக்கு கீழ் கண்ட விலாசத்திற்கு எழுதவும்.

S. திருமலைசாமி செட்டி,
A. முருகேச முதலி.
No. 12 கச்சேரி வீதி, திருப்பூர்.

## காங்கிரஸ் அத்தாக்ஷி பெற்ற சுத்தகதர்.

தமிழ்நாடு காங்கிரஸ் கதர் போர்டின் விலைக்கே விற்கப்படும். எல்லா ரகங்களும், கிடைக்கும் விலை ஜாபிதாவுக்கும் மற்ற விபரங்களுக்கும், கீழ் கண்ட விலாசத்துக்கு எழுதவும். சாம்பின் (மாதிரிக்கு) 4 அணா ஸ்டாம்பு அனுப்பவும்.

கற்பக விநாயகர் கதர் நிலயம்.
ஊத்துக்குளி S. I Ry.

## மூன்று மாதத்தில் மோட்டார் ஓட்ட கற்றுக் கொள்ளலாம்.

1916-ஹு ஸ்தாபிக்கப்பட்டது.

எங்கள் கம்பெனியில் மோட்டார் வண்டிகளை ஓட்டவும், பிரிக்கவும், பூட்டவும் வேறு பல சீர் திருத்தங்கள் செய்யவும் கற்றுக் கொடுக்கப்படும். தேர்ச்சியடைய மூன்று மாதம் ஆகும். தேர்ச்சி அடைந்த பின்பு கவர்ன்மெண்டு லைசென்சும் எமது கம்பெனி சர்ட்டிபிகேட்டும் கொடுக்கப்படும்.

மற்ற விபரத்திற்கு நேரில் எழுதி தெரிந்துகொள்ளலாம்.

மதருஸ் தென்னிந்தியா
மோட்டார் இன்சினீயரிங் ஒர்க்ஸ்,
மைலாப்பூர்-மதருஸ்.

## திருப்பூர் சுத்த கதர் ஜவுளிகள்.

பலரகம் வேஷ்டிகள், துண்டுகள், வெள்ளை பீஸ் ரகங்கள், ஷர்ட்டிங், கோட்டிங், சீட்டி தினுசுகள், தாவணிகள், சுங்கடி சேலைகள் இன்னும் அநேக தினுசுகள் எங்களிடத்தில் கிடைக்கும். தேவைக்கு ஆர்டர் செய்யுங்கள். வி. பி. அனுப்ப முடியாத வெளிநாடுகளுக்கு பூராத் தொகையையும் முன் பணமாக அனுப்பவேண்டும்.

(அத்தாட்சி பத்திரம்.)

ஸ்ரீமான் ஆர். எம். எஸ். சிதம்பரம் செட்டியார், முத்துசாமி செட்டியார் கைநூலால் கைத்தரியால் தயார்செய்யப்பட்ட சுத்த கத்தர் துணிகளையே உற்பத்திசெய்து நியாயமான விலைக்கு விற்றுவருகிறார்.

S. இராமநாதன்: காரியதரிசி, கத்தர் இலாகா
விலாசம்:—
ஆர். எம். எஸ் சிதம்பரம் செட்டியார்,
முத்துசாமி செட்டியார்,
கத்தர் டிப்போ, திருப்பூர். (தென் இந்தியா)

## கத்தர் வியாபாரிகளுக்கு அறிக்கை.

தமிழ்நாடு கத்தர் போர்டின் அத்தாட்சிப்பத்திரம் பெற்றிருக்கிறது. எங்கள் கதர் ஸ்டோரில் எல்லா விதமான . தினுசுகளும் தயாராகிறது. கதர் போர்டின் விலைக்கே கொடுக்கிறோம். அட்வான்சுடன் ஆர்டர் அனுப்புங்கள்.

கே. எஸ். ஆர். எம். ராமசாமி செட்டியார்,
கத்தர் ஸ்டோர் அமராவதிபாளையம்,
பொன்னுக்காளிபாளையம் போஸ்டு,
(திருப்பூர் மார்க்கம்.)

## கோலார் தங்கவயல் ஜீவகாருண்யச் சங்கம்.

### 6-ம் ஆண்டு விழா.

இராபர்ட்சன் பேட்டை.

பேரன்பினீர்! எல்லாம்வல்ல இறைவன் திருவருள் துணைகொண்டு, நிகழும் அக்ஷய வருடம் ஆவணித்திங்கள் 4, 5, 6 (1926-ம் வருடம் ஆகஸ்டு மாதம் 20, 21, 22, வெள்ளி, சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் இச்சங்கத்தின் ஆறுமாண்டு நிறைவு விழா, கீழ்க்கண்ட முறையில் குறிப்பிடப்பட்டிருக்கும் இடங்களில் நடைபெறும். அதுகாலை, சென்னை நியாய கலாசாலைப் போசிரியரும், 'செந்தமிழ்ச் செல்வி'யின் இசைஆசிரியர் கூட்டத்துத் தலைவருமாகிய திருவாளர்

கா. சுப்பிரமணிய பிள்ளை, எம்.ஏ., எம்.எல்., அவர்களின் அவைத் தலைமையின் கீழ், மதிநுட்பம் வாய்ந்த கல்வியாளர்களாகிய புலவர் பெருமக்கள் பலர் பல அரிய சொற்பொழிவுகள் நிகழ்த்துவார்கள்.

#### நிகழ்ச்சி முறை.

#### முதல் நாள், 20-8-26 காலை.

7-மணிக்கு கடவுள் வாழ்த்து, பூஜை முதலியன.
11 ,, ஏழைகளுக்கு அன்னமளித்தலும், பசுக்களுக்கு ஆகாரமளித்தலும்.

மாலை

இடம்:—இராபர்ட்சன் பேட்டை நாடக வரங்கு.
5—6-மணிவரை அவைக்தலைவரவர்கள் வரவேற்பு, வந்தனோபசார வருடாந்திர அறிக்கைப் பத்திரங்கள் வாசித்தல்.
6—7 ,, அவைத்தலைவர் முன்னுரை.
7—8 ,, "அறம்"—ஸ்ரீமத் ம. ரா. குமாரசுவாமி பிள்ளை அவர்கள், திருக்கோவலூர்.
8— அவைத்தலைவர் முடிப்புரை.

#### இரண்டாம் நாள், 21-8-26 காலை.

11-மணிக்கு பசுக்களுக்கு ஆகாரமளித்தல்.

மாலை

இடம்:-இராபர்ட்சன் பேட்டை கிங் ஜார்ஜ் ஹால்.
4—5-மணிவரை "இயற்கை வாழ்வு"—ஸ்ரீ திரு. வி. கலியாண சுந்தர முதலியாரவர்கள், 'நவசக்தி' ஆசிரியர், சென்னை.
5—7 ,, "குடியின் கேடு"—திருவாளர் ஈ. வெ இராமசாமி நாயக்கரவர்கள், 'குடி அரசு' ஆசிரியர், ஈரோடு.
7—8 ,, "பெரியார் மகிமை"—ஸ்ரீமத் ம. ரா. குமாரசுவாமிபிள்ளை அவர்கள், திருக்கோவலூர்.
8— அவைத்தலைவர் முடிப்புரை.

#### மூன்றும் நாள். 22-8-26. காலை.

11-மணிக்கு ஏழைகளுக்கு அன்னமளித்தலும், பசுக்களுக்கு ஆகாரமளித்தலும்.

மாலை

இடம்:—இராபர்ட்சன் பேட்டை நாடக வரங்கு
4—5-மணிவரை "தாழ்த்தார் முன்னேற்றம்" திருவாளர் ஈ. வெ. இராமசாமி நாயக்கரவர்கள், ஈரோடு.
5—6 ,, "பிறவிப்பயன்"—திருவாளர் ஆ. தா. அரங்கசாமி நாயக்கரவர்கள், போளூர்.
6—7 ,, "இன்னாசெய்யாமை"—ஸ்ரீ திரு. வி. கலியாண சுந்தர முதலியாரவர்கள்.
7—8 ,, "அருள்"—ஸ்ரீமத் ம. ரா. குமாரசுவாமி பிள்ளை அவர்கள், திருக்கோவலூர்.
8— தலைவர் முடிப்புரை.

அவ்வமயம் மூன்று நாட்களிலும் தாங்கள் தங்கள் நண்பர்களுடன் வந்திருந்து கேட்டு இன்புறுமாறு வேண்டுகின்றோம்.

இங்ஙனம்,

K. இராஜகோபால ராவ், B. A., B. L.,
ப. வே. சஞ்சீவி நாயுடு.

காரியதரிசிகள்.

---

## ஆதித் திராவிட சகோதரர்களுக்கு ஓர் எச்சரிக்கை.

அறிவிற்சிறந்த கனவான்களே! ஆதிதிராவிட சகோதரர்களே! இதைச் சற்று ஆழ்ந்து யோசிக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன். சாம்பான் அல்லது சாம்பவன என்ற பட்டப் பெயர் புதிதா? பழையதா? பழய பெயர்தானே! சரி. அந்தப் பெயரோடு கடந்த நூற்றுண்டுகளாக ஜீவித்து வந்த நமது குலத்தவர்களுக்குக் கிடைத்த பெருமை என்ன? சமத்துவத்திற்காக பாடுபடும் இந்தக்காலத்தில் வேண்டாமென்று வெட்டிப்புதைத்த சாம்பன் பட்டத்தையும் அதோடு சேர்ந்த உம்பளிக்கம், காணியாச்சி, அடிமைத்தனம், அஞ்ஞானம இவைகளை மறுபடியும் விலை கொடுத்து வாங்க எத்தனிக்கும் தலைவர்களும் உண்டா, என்னே முன்னேற்றம் எப்படிப்பட்ட நாகரிகம் என்று சொல்லலாம். இவ்விலங்கையில் இது ஓர் கொண்டாட்டமாக யிருந்தாலும் ஏழை ஆதி திராவிடர்களுக்குப் பெருந் திண்டாட்டமாகு மென்பதை உணர்ந்து நடந்துகொள்ள வேண்டுமென்றுக் கேட்டுக் கொள்கிறேன். ஒன்பது நவக்கிரகங்களைப் போல் சேர்ந்து விவேகமற்ற சகோதரர்கள் வெளியாக்கிய துண்டுப்பிரசுரத்தைப்போல் நமக்கும் நம்மைப்போல் கஷ்ட நிலைமையிலிருக்கும் 13 ஜாதியாரல்ல. இன்னம் 13 ஜாதியாரை அதிகமாய்ச் சேர்த்து ஆதி திராவிடரென்றழைத்தாலும் நன்மையே. சேர்ந்து வாழ்வதே சிறந்த வலிமை நமக்கு மாத்திரம் தனிமையாகச் சாதிப்பட்டம் வேண்டாம். நம்மைப்போல் கஷ்ட நிலைமையிலிருக்கும் ஒவ்வொரு தமிழ் மக்களும் நன்மையடையட்டும். அவர்களுக்குக் கிடைக்கிற நன்மை நமக்குக் கிடைத்தால் போதும். (Rolling stone gather no moss) உருண்டுகொண்டிருக்கும் கல்லில் பணிகட்டி உறையாது என்ற ஆங்கிலேயப் பழமொழிப்படி ஒவ்வொரு காலத்தில் ஒவ்வொரு ஜாதிப் பெயர் வைத்துக்கொண்டு போவதால் ஒரு சமயம் பலருக்குப் பிறந்தவன் என்ற ஓர் நூதனப்பெயர் வந்தாலும் வந்துவிடும். யாதொரு பிரயோஜனமுமடைய மாட்டோம். சகோதரர்களே, நமயினத்தவர்களுக்கு நன்மை செய்ய வேண்டுமானல் இப்பொழுதிருக்கும் ஆதி திராவிடர் என்ற பெயரைக் கொண்டே வேண்டிய நன்மை செய்யலாம். வஞ்சகம், பொறாமை, பொய், புறங்கூறல், பேராசை இவைகளை யகற்றி, தெய்வ பக்தி, வைராக்கியம் ரோசம், அபிமானம, அன்பு முதலிய நற்குணங்களை யதுசரித்து வருவோமானல் பகவான் நாம் எடுத்துக்கொள்ளும் ஒவ்வொரு விஷயத்தையும் சித்திபெறச் செய்வாரென்பது நிச்சயம்.

ஓம் தத் ஸத்.

இங்ஙனம், P. S. சின்னையா பிள்ளை,
குலமத ஊழியன் கொழும்பு

---

## விதவா விவாக விளக்கம்.

திருச்சிபுரம் திருவாளர் சி. பி. இராஜகோபால் நாயுடு அவர்களால் எழுதப்பட்ட விதவாவிவாக விளக்கம் என்னும் புத்தகம் வரப்பெற்றோம் அடுத்த இதழில் இப்புத்தகத்திற்கு மதிப்புரை எழுதப்படும்.

---

## அழைப்பு

### கோவை ஜில்லாபோர்டு தலைவருக்கு தேக்கச்சேரி விருந்து.

பெருந்துறை பிர்கா பொது ஜனங்களின் சார்பாக பெருந்துறையில் 1926-ம் வருடம் ஆகஸ்டு மாதம் 20ந் தேதி வெள்ளிக் கிழமை பகல் 3½ மணிக்கு பெருந்துறை கோவாபரேடிவ் யூனியன் ஆபிசில் ஊத்துக்குளி குமார ஜமீன்தார் ஸ்ரீமான் அகும்தூர் முத்துக்கிருஷ்ண காளிங்கராயர் அவர்கள் தலைமையின் கீழ் கோயமுத்தூர் ஜில்லா போர்டு பிரசிடெண்டு ஸ்ரீமான் ராவ் பகதூர் ஸி. எஸ். இரத்தின சபாபதி முதலியாரவர்களுக்கு ஒரு உபசாரப் பத்திரம் வாசித்துக் கொடுப்பதுடன் சிற்றுண்டிக் கச்சேரியும்நடத்துவதாக ஏற்பாடு செய்திருப்பதால் தாங்கள் ஷை வைபவங்களுக்கு விஜயம் செய்யவேணுமாய்க் கேட்டுக் கொள்ளுகிறோம் என்று அப்பிச்சியார்மடம் திரு. எம். ஏ. ஆண்டமுத்துக் கவுண்டர் அவர்கள் உள்ளிட்ட 15-கனவான்கள் அழைப்புக் கடிதம் அனுப்பியுள்ளார்கள்.

---

## தென் திருவிதாங்கூர் மருத்துவர்களின் மகாநாடு.

அட்சய வருஷம் ஆடி மாதம் 6-ம் நாள் புதன் கிழமை வடிவீசுரம் பண்டிதர் விநாயகர் கோவில் தெருவில் கூடிற்று. பல இடங்களிலிருந்து 500ஜனங்கள் வந்திருந்தனர். திருநெல்வேலி ஜில்லா மருத்துவ குல சங்கத் தலைவர் திரு. மு. குலசேகரம் பண்டிதர் அவர்கள் தலைமை வகித்து சமூக முன்னேற்றத்தைப்பற்றி விரிவுரை செய்தார். ஸ்ரீமான்கள் நி. முத்துசுவாமி பண்டிதர், பொ. ஷண்முகம் பண்டிதர், சுசீந்திரம் பண்டிட் சுப்பிரமணிய பிள்ளை, திருப்பதி சித்திர புத்திர வைத்தியர் முதலியவர்கள் முறையே சமூக முன்னேற்றம் சங்கத்தின் அவசியம், ஒற்றுமை, ஒழுக்கம், கல்வி, முதலியவைகளைப் பற்றி விரிவுரை செய்தார்கள், பின்னர் வடிவீசுரம் மருத்துவ சகோதரர்களுக்குள் நேரிட்டிருந்த மனவேற்றுமைகளை நீக்கி ஒற்றுமை உண்டு பண்ணப்பட்டது. தென் திருவிதாங்கூர் மருத்துவ குல சங்கத்திற்கு வடிவீசுரம் திருவாளர் பண்டிட் இ. குமாரசுவாமிபிள்ளையவர்களைத் தலைவராகவும் திருவாளர் மு. அப்ப வைத்தியர் யென்று பெயர் வழங்கிய அனந்த நம்பி வைத்தியரவர்களை பொக்கிஷதாராகவும் சண்முக வைத்தியரவர்களை காரியதரிசியாகவும் பக்கப் பகுதிகளிலிருந்து சுமார் பதினைந்து பேர்களை நிர்வாக மெம்பர்களாகவும் தெரிந்தெடுக்கப்பட்டு மணவிழா மங்கை மகன் வீட்டாருக்கு ரூ. 5-ம் மகள் வீட்டாருக்கு ரூ. 2-ம் மற்ற எந்தச் சுப காரியங்களுக்கும் சங்கத்திற்கு ஒரு ரூபாய் வீதம் வசூல் செய்து வரவேண்டுமென்று சபையோர் எல்லோராலும் ஒப்புக் கொள்ளப்பட்டதோடு சமூக முன்னேற்றத்திற்கு உகந்த பல தீர்மானங்கள் செய்யப்பட்டன.

# சென்னையில் குழுமிய ஓர் பெருங் கூட்டம்.

## சுயராஜ்யத்தைவிட சுய மரியாதையே பிரதானம்.

வகுப்புத் துவேஷத்தைக் கிளப்புகிறவர்கள் யார்? பார்ப்பனர்களே.

நால்வகை வகுப்பு நாட்டில் உதித்த வகை.

பார்ப்பனர்கள் நம்மை ஏமாற்றி விட்டார்கள்.

எப்படி?

"மோக்ஷம்" "சுயராஜ்யம்" என்கிற வார்த்தைகளால்.

## நாம் போராடுவது சுயமரியாதைக்காகவே.

திரு. ஈ. வெ. இராமசாமி நாயக்கர் சொற்பொழிவு.

சென்னை திருவல்லிக் கேணியில் சென்ற ஜூலை மாதம் 31-ந் தேதியில் ஸ்ரீமான் ஈ. வெ. இராமசாமி நாயக்கர் ஒரு சிறு பிரசங்கம் செய்தார். அப்பிரசங்கத்திற்கு சுமார் 3000 பேர் வரையில் சகல வகுப்பார்களும் வந்து கூடியிருந்தார்கள் பெருத்த கரகோஷத்தினிடையே ஸ்ரீமான் நாயக்கர் எழுந்து பேசியதாவது:—

நான் இன்று உங்கள் முன்னிலையில் பேசப் போகும் விஷயமானது கேவலம் தேர்தல்களைப்பற்றியோ, தேர்தல்களில் யாருக்கு ஓட்டுக்கொடுப்பது என்பதைப் பற்றியோ பேச வரவில்லை. இத்தேர்தல்களில் யார் ஜெயித்தாலும் யார் தோற்றாலும் நமக்குப் பெரிய லாபமும் நஷ்டமும் ஒன்றும் ஏற்பட்டுவிடாது. ஆதலால் அதைப்பற்றி எனக்கு அக்கறையில்லை. எனக்குள்ள கவலையெல்லாம், மக்களின் பெரும் பகுதியினராகவும் எல்லா வழிகளிலும் இன்றைய தினம் முக்கியமானவர்களாகவும் உள்ள நாம் தாழ்ந்தவர்களென்றும் அடிமைகளென்றும் கருதப்பட்டு சுயமரியாதையற்று கிடக்கிறோம், அன்னியர்களால் விலங்குகளைப் போல் நடத்தப் படுகிறோம், ஆதலால் இவ்விதக் குறைகள் ஒழிய வழிதேட வேண்டியது இப்பொழுதுள்ள நமது முக்கிய கடமை என்பதே யாகும். அவற்றிற்கு நம்மாலானதைச் செய்ய வேண்டுமென்றும் அதற்காக நீங்கள் என்ன செய்யப் போகிறீர்களென்றும் சொல்லித்தெரிந்து போகவே இங்கு வந்திருக்கிறேன். நமது தேசத்தில் இப்பொழுது ஒரு வகுப்பார் சுய நலங்கருதி 'காங்கிரஸ்' 'தேசியம்' 'சுயராஜ்யம்' என்கிற பல செல்வாக்குள்ள பெயர்களைச் சொல்லிக்கொண்டு நமது சமூகத்தை அழித்துத் தங்கள் ஆதிக்கத்தை நிலைநிறுத்திக் கொள்ள இத்தேர்தல்களை உபயோகப் படுத்திக் கொள்ளுகிறபடியால் அவ்வேமாற்றத்தில் நீங்கள் ஏமாந்து போகக் கூடாதென்று சொல்ல வந்திருக்கிறேன். (கரகோஷம்) தயவு செய்து இனிமேல் கை தட்டாதீர்கள்.

தற்காலம் இன்றைய தினமுள்ள ராஜீய வேஷங்கொண்ட பல பார்ப்பனர்கள் என்னை வகுப்புத் துவேஷக்காரனென்றும் வகுப்புக் கலவரங்களை மூட்டி விடுகிறவனென்றும் சொல்லியும் எழுதியும் ஆள்களை விட்டுப் பிரசாரம் செய்தும் வருகிறார்கள். வகுப்புத் துவேஷமும் வகுப்பு வேற்றுமைகளும் என்னால் ஏற்பட்டதா? அல்லது நம் நாட்டுப் பார்ப்பனர்களால் ஏற்பட்டதா? என்பதை நீங்களே சற்று யோசித்துப் பாருங்கள். தயவு செய்து நீங்கள் என்னோடு எழுந்து வருவீர்களானால், இவ்வூருக்குள் சுற்றிப் பார்த்தால், பார்ப்பனர்கள் வைத்திருக்கும் ஒவ்வொரு காப்பிக்கடைகளிலும், சாப்பாட்டுக்கடைகளிலும், ரயில்களில் உள்ள காப்பி சாப்பாட்டுக் கடைகளிலும், சத்திரம் சாவடிகளிலும், கோயில் குளங்களிலும், இது பிராமணர்களுக்கு, இது சூத்திரர்களுக்கு, பஞ்சமர்களுக்கும் முகம்மதியர்களுக்கும் கிறிஸ்தவர்களுக்கும் இங்கு சாப்பாடு பலகாரம் தண்ணீர் வகையரா முதலியன கொடுக்கப் படமாட்டாது. இந்த இடத்தில் சூத்திரர்கள் தண்ணீர் மொள்ளக்கூடாது; இந்த இடத்தில் சூத்திரர்கள் குளிக்கக்கூடாது; இந்தப் பள்ளிக்கூடத்தில் சூத்திரர்களை சேர்த்துக்கொள்ள முடியாது; இன்னின்ன விஷயங்களை சூத்திரர்கள் படிக்கக்கூடாது; பிராமணர்கள் மாத்திரம் இதுவரையில் செல்லலாம்; சூத்திரர்கள் இந்த இடத்திற்கப்புறம் போகக் கூடாது; இந்த வீதியில் சூத்திரர் குடியிருக்கக் கூடாது; இன்ன தெருவில் பஞ்சமர் நடக்கக் கூடாது என்று இன்னும் பலவாறுகப் போர்டுகள் போட்டும் நிர்ப்பந்தங்கள் ஏற்படுத்தியும் பிரித்து வைத்துத் துவேஷத்தையும் வெறுப்பையும் இழிவையும் உண்டாக்க வருவது நானா? அல்லது பார்ப்பனர்களா? என்பதை கவனியுங்கள்.

தாங்களே நம் ஜாதிகளைப் பிரித்து நம்மை இழிவு படுத்தித் தாழ்த்தி வைத்து விட்டு "என்னையா இப்படிச் செய்கிறீர்கள்? இது தர்மமா? நியாயமா?" என்று கேட்டால், நம்மை வகுப்புத்துவேஷக்காரன் என்றும் வகுப்புப் பிரிவினைக்காரன் என்றும் வகுப்புப் பிரிவினைக்காரன் என்றும் சொல்லிக் கொன்று விடப்பார்த்தால், அதற்கு நான் பயந்து கொள்ளுவேனா என்று கேட்கிறேன். ரயில்வே ஸ்டேஷன்களிலுள்ள ஓட்டல்களை எடுத்துக்கொள்ளுங்கள். ரயிலில் பெரும்பான்மையாய்ப் பிரயாணம் செய்கிறவர்கள் நாமாயிருக்கிறோம்; ஓட்டல்காரனுக்கு அதிகமான லாபம் கொடுக்கிறவர்கள் நாமாயிருக்கிறோம்; ஆனால் அந்த ஓட்டலுக்காக ரயில்வே அதிகாரிகள் கொடுத்த இடத்தில் முக்கால்பாகத்திற்கு மேலாக தாங்கள் எடுத்துக் கொண்டு, கொஞ்சம் இடத்தை நமக்கு ஒதுக்கி வைத்து விட்டு, அந்த இடத்திலும் எச்சில் போடவும் சாணி சட்டி விளக்குமார் வகையராக்களை வைக்கவும் கை கழுவவும் செய்கிறார்கள். ஒரு பார்ப்பனன் குஷ்டரோகியானாலும் அவன் நேரே சமயலறைக்குப் போய் சுடச்சுட உள்ள பதார்த்தங்களில் தனக்குவேண்டுமானதை அடுப்பிற்குப் பக்கத்திலிருந்தே எடுத்துச் சாப்பிட்டு விடுகிறான். நம்மில் எவ்வளவு பெரிய மனிதர்களானாலும் வெளியில் நின்று கொண்டு நாலணாவைக் கையில் தூக்கிக் காட்டிக்கொண்டு, இடைச்சி மார்க்குக் கட்டிப் பால் விளம்பரப் படத்தில் பெண்கள் கூட்டம் பால் கேட்பது போல், ஒரு கையைத் தூக்கிக் கொண்டு சாமி, சாமி என்று கத்த வேண்டியதாயிருக்கிறது. ஆறினதையும் ஈ, பூச்சி, புழுக்கள் வீழ்ந்ததையும் விற்காமல் தேங்கினதையும் நாம் வாங்கிச் சாப்பிடவேண்டியதாயிருக்கிறது. இந்த நிலையில் வகுப்பு வித்தியாசத்தையும் வகுப்புத் துவேஷத்தையும் வளர்க்கிறவர்கள் நாமா? இந்தப் பார்ப்பனர்களா? என்பதை யோசித்துப் பாருங்கள்.

நம்முடைய பணத்தைக் கொண்டு மத சம்பந்தமான கல்விகளுக் கென்றும் வேத பாடசாலை என்றும் பெரிய பெரிய பள்ளிக்கூடங்களைக் கட்டிக்கொண்டு அதில் பிராமணர்கள் தான் படிக்கலாம், சூத்திரர்கள் படிக்கக்கூடாது என்று சொல்லி நம்மைத் தள்ளி வைத்துவிடுகிறார்கள். ஜாதி வித்தியாசத்தையும் வகுப்புத் துவேஷத்தையும் வளர்க்கிறவர்கள் நாமா, அவர்களா? நம்முடைய பணங்களிலேயே பெரிய பெரிய கோவில்கள் கட்டப்பட்டு, நம்முடைய பணங்களைக் கொண்டே பூஜைகள் செய்யப்பட்டுவரும் சுவாமிகளிடத்தில் நம்மை போகக்கூடாது என்று சொல்லுகிறார்கள். இதனால் வகுப்புத் துவேஷத்தை உண்டாக்குகிறவர்கள் நாமா, அவர்களா? ஆகவே இப்பொழுது ஜாதி வித்தியாசம் வளரக்கூடாதென்பதும் வகுப்புத் துவேஷங்கள் ஒழியவேண்டுமென்பதும்தான் நமது கொள்கை. அதற்காகத்தான் நான் பாடுபடுகிறேன். ஜாதி வித்தியாசங்களான மக்கள் உயர்வு தாழ்வு என்பதை ஒழிப்பதற்கும் வகுப்புத் துவேஷங்கள் ஒழிவதற்கும் முட்டுக் கட்டையா

யிருந்து வருகிறவர்கள் நாமா? அந்தப் பிராமணர்களா? என்பதை யோசித்துப்பாருங்கள்.

ஜாதி வித்தியாசம் நிலைத்திருப்பதற்கும் வகுப்புத் துவேஷங்கள் வளருவதற்கும் நிரந்தரமான ஏற்பாட்டை பார்ப்பனர்களே செய்து வைத்துக்கொண்டு நம்மீது குறை கூறுகிறார்கள். நாம் இப்போது பார்ப்பனர்களைக் கேட்பதெல்லாம் எங்களையும் சமமாகப் பாவியுங்கள், எங்களைத் தாழ்ந்தவர்கள் என்று சொல்லி இழிவுப்படுத்தி எங்களுடைய சுயமரியாதையைக் கொல்லாதீர்கள் என்பதேயன்றி வேறில்லை. இதை அவர்கள் கொஞ்சமும் கவனியாமல் இந்த தேசத்தில் 100-க்கு 97 பேர்களாயிருக்கிற நம்மை சூத்திரர்களென்றும் தாழ்ந்தவர்களென்றும் சொல்லுவதோடல்லாமல் நமக்குஇவர்கள் தர்மக் கர்த்தாக்கள் என்று பெயர் வைத்துக்கொண்டு சர்க்காருக்கு உள் உளவாயிருந்து எல்லா உத்தியோகங்களையும் அதிகாரங்களையும் இவர்களே கைப்பற்றிக் கொண்டு நமக்குக் கொடுமை செய்து வருகிறார்கள். நாம் நமது சுய மரியாதைக்காகத்தான் இவ்வளவு பிரயத்தனப் படுகிறோமேயல்லாமல் கேவலம் இந்த உத்தியோகத்திற்கு ஆசைப் பட்டல்ல. ஆனால் நமது பார்ப்பனர்கள் இந்த உத்தியோகங்களைக் கைப்பற்றிக் கொண்டதன் பலனாகவே நம்மை தங்களுக்கும் சர்க்காருக்கும் நிரந்தரமான அடிமைகளாக்கி நம்மீது ஆதிக்கம் செலுத்தி வருகிறார்கள். இவற்றிலிருந்து தப்பி நமது சுயமரியாதையைக் காப்பாற்றிக் கொள்வதற்காகவே இப் பார்ப்பனர்களை எப்படியாவது எல்லாவித உத்தியோகங்களிலிருந்தும் ஒழிக்க வேண்டுமென்று கஷ்டப்படுகிறோம். (பார்ப்பனர்களுக்கு வெட்கம், வெட்கம் என்கிற சப்தமும் கரகோஷமும்).

இவ்விதம் நீங்கள் கூச்சலிடுவதில் பயனில்லை; கூச்சலிடுவதற்காகவோ கரகோஷம் செய்வதற்காகவோ நான் உங்கள் முன்னால் பேச வரவில்லை. உத்தியோக விஷயத்தில் மாத்திரம் பார்ப்பனர்கள் விஷயத்தில் பொறாமையும் துவேஷமும் இருக்கிறதேயல்லாமல் வைதீகச் சடங்குகளில் நீங்கள் அவர்களை உங்களைவிட உயர்ந்தவர்களென்றே எண்ணியிருக்கிறீர்கள். நீங்கள் எவ்வளவு படித்தவர்களாயிருந்தாலும், எவ்வளவு பெரிய பதவியிலும் அதிகாரத்திலும் இருந்தாலும், இரண்டு காய்ந்த தர்ப்பைப் புல்லைக் கொண்டு சாம்பலையோ, நாமத்தையோ அடித்துக் கொண்டு ஒரு பார்ப்பனன் உங்கள் வீட்டிற்கு வந்தானேயானால் 'சுவாமி' என்று அவன் காலில் விழுகத் தயாராயிருக்கிறீர்கள். அவனுக்குப் பணத்தைக் கொடுத்தால் உங்கள் பெற்றோருக்கு மோட்சம் கிடைக்கும் என்கிற முட்டாள்தனமான எண்ணம் இன்னமும் உங்கள் ரத்தத்தில் கலந்து கொண்டிருக்கிறது. அவன் கைப்பட தாலி எடுத்துக்கொடுத்து நீங்கள் அதைக் கும்பிட்டு வாங்கிப் பெண்களின் கழுத்தில் கட்டினால்தான் உண்மையான கலியாணம் என்று நினைக்கிறீர்கள்; ஒரு பார்ப்பனன் உங்கள் வீட்டுப் பெண்ணையும் பிள்ளையையும் படுக்கை அறைக்குள் அனுப்பி கதவைச் சாத்தினால்தான் நல்ல பிள்ளைகளைப் பெற முடியுமென்று நினைக்கிறீர்கள்; ஒரு பார்ப்பனனுக்கு பணத்தைக் கொட்டிக் கொடுத்து, அவன் காலைக் கழுவின தண்ணீரை சாப்பிட்டால்தான் உங்கள் பாவம் தொலையுமென்றும் நீங்கள் மோட்சத்திற்குப் போகக் கூடுமென்றும் நினைக்கிறீர்கள். இவ்வித முட்டாள்தனமான மனப்பான்மையை மாற்றிக் கொள்ளத் தயாராயிருக்கிறீர்களா? (ஆம், ஆம் என்கிற சப்தம்) அப்படியானால் உங்களுடைய சந்தோஷங்களுக்குப் பொருள் உண்டு. அப்படிக்கில்லாமல் வீண் ஆரவாரங்களினாலும் அற்ப சந்தோஷத்தினாலும் பலனென்ன?

ஆதலால் நாம் இப்பொழுது செய்யும் இந்தப் போராட்டம் சுயமரியாதைப் போராட்டமே யல்லாமல் உத்தியோகத்திற்காகவே செய்யும் உத்தியோகப் போராட்டமல்லவென்பதை நன்றாய் உணருங்கள். நமது சுய மரியாதையைக் காப்பாற்றிக் கொள்வதற்கு இவ்வித உத்தியோகங்கள் சகாயமாயிருக்கும். மோட்சம் என்கிற வார்த்தையினாலும், சுயாராஜ்யம் என்கிற வார்த்தையினாலும், சமூகவாழ்க்கையிலும் அரசியலிலும் முறையே நம்மைப் பார்ப்பனர்கள் ஏமாற்றி ஆதிக்கம் பெற்று விட்டார்கள். இவ்விரண்டு விஷயங்களிலும் பார்ப்பனர்களுக்குள்ள ஆதிக்கத்தை விரட்டி அடித்தால்தான் நாம் சுயமரியாதை அடைய முடியும். இந்தச் சுய மரியாதைக்காக நாம் இன்று, நேற்று மாத்திரம் போராடவில்லை. ஜஸ்டிஸ் கட்சி ஏற்பட்டும், நாயர் செட்டியார் என்கிற மகான்களின் இயக்கம் ஏற்பட்டும் சுமார் பத்தாண்டுகள் தானாகின்றன. இன்றைக்கு எத்தனையோ ஆயிரக்கணக்கான வருஷங்களுக்கு முன்னதாகவே இப்பார்ப்பனரின் கொடுமையை உணர்ந்த நம் தமிழ் மக்கள் அதிலிருந்து தப்பவேண்டுமென்று எவ்வளவோ பிரயத்தனம் செய்திருக்கிறார்கள். நமது சித்தர்களெல்லாம் எவ்வளவோ தெளிவாய் பார்ப்பனர்களின் அக்கிரமங்களை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள், அதனால்தான் நமது பார்ப்பனர்கள் சித்தர் நூல்களையெல்லாம் ஒழித்து, சித்தர் உபதேசங்களையெல்லாம் மறைத்து, இராமாயணம், பாரதம், அரிச்சந்திர புராணம் முதலிய நூல்களைப் பார்ப்பனர்களுக்கு கனுகூலமாக எழுதி அவற்றிற்குச் செல்வாக்குண்டாக்கி, அவற்றைப் படித்தால் மோட்சம் என்று சொல்லி நம்மை ஏமாற்றி விட்டார்கள். கபிலர், பாய்ச்சலூரார், ஔவையார், திருவள்ளுவர், முதலிய பெரியோர்கள் செய்திருக்கும் நூல்களினாலும் அவர்களுடைய உபதேசங்களினாலும் இன்றைக்கு ஐயாயிரம் வருடங்களுக்கு முன்பாகவே பார்ப்பனர்கள் கொடுமைகளை வெளிப்படுத்தி அவைகளை ஒழிக்கப் பிரயத்தனப் பட்டிருக்கிறார்கள். சமீப காலத்தில் புத்தர் சமணர் முதலியோர்களும் பார்ப்பனர்கள் கொடுமையை ஒழித்து மக்கள் எல்லோரும் சமம்" என்பதும் அன்பும் சமரச உணர்ச்சியும்தான் கடவுளென்பதும் உலகத்திற்குணர்த்த வந்ததை இப்பார்ப்பனர்கள் சகிக்காமல் இவர்கள் பிரயத்தனத்தையெல்லாம் ஒழித்து விட்டார்கள்.

பார்ப்பனர்கள் தங்களை உயர்ந்த ஜாதியார் என்று சொல்லிக்கொண்ட காலத்தில் பலவான்களாக இருந்தவர்கள் அதை ஒப்புக்கொள்ளாமல் பலாத்காரத்தை உபயோகப்படுத்த வந்த சமயத்தில், தந்திரமாய் 'நீங்கள் க்ஷத்திரியர்களாயிருந்து அரசாட்சி செய்யுங்கள், நாங்கள் உங்களுக்கு மந்திரிகளாயிருந்துயோசனைசொல்லுகிறோ'மென்று சொல்லி,அவர்களை ஏமாற்றி கைக்குள் போட்டுக் கொண்டார்கள். கையில் செல்வமும் செல்வாக்குமுள்ள மற்றொரு கூட்டத்தார் 'நீங்கள் எப்படி உயர்ந்த ஜாதியாகலாம்' என்று விவாதிக்கையில், 'நீங்கள் வைசியர்களாக இருங்கள், உங்களுக்குக்கீழ் அநேகர் இருக்கிறார்களெ'ன்று சொல்லியும் 'உங்களுக்கும் எங்களைப்போல் பூணூல் போடுகிறோ'மென்றும் சொல்லி அவர்களையும் ஏமாற்றி கைக்குள் போட்டுக்கொண்டார்கள். பிறகு பெரும்பான்மையாயிருந்த விவசாயக் காரர்களையும் கைத்தொழிற் காரர்களையும் பார்ப்பனர்களுக்கு முதல் மூன்று வகைப் பிரிவுக் காரர்களுக்கும் வேலை செய்கிறவர்களென்று ஏற்படுத்தி விட்டார்கள். அவர்களில் பலர் இதை ஒப்புக்கொள்ளாமல் வாதாடவே 'உங்களுக்கும் கீழாக ஒரு பிரிவாரை வைத்திருக்கிறோம், அவர்களுக்கு நீங்களேதான் எஜமானர்கள், உங்கள் இஷ்டம்போல் அவர்களை நடத்திக்கொள்ளலாம்' என்று சொல்லி சாந்தமே உருவாகவும், சூது வாது தெரியாத சாது ஜனங்களாகவும் இருந்தவர்களை பஞ்சமர்களென்று பெயர் வைத்து அவர்களை ஷெடி சூத்திரர் என்பவர்களுக்குக் காட்டிக் கொடுத்து அவர்களையும் ஏமாற்றி விட்டார்கள். கடைசியாக வாயில்லாப் பூச்சிகளாகிய ஒரு வகுப்பார், தீண்டாதவர்களாகி, துன்பப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

இவ்வித கொடுமை செய்தவர்களைத்தான் நீங்கள் இன்றையதினம் உங்கள் மத குருவாய் நினைத்துக் கொண்டிருக்கிறீர்கள் இவ்விதக் கொடுமை நம்மை விட்டு விலக வேண்டுமானால் மத விஷயத்திலும் அரசியல் விஷயத்திலும் நாம் ஆக்கம் பெற வேண்டும். ஆதிக்கம் பெற்று நமது சுயமரியாதையை அடைய முயற்சிக்கவேண்டும். ஒரு சமூகத்திற் காணும் ஒரு தேசத்திற் காணும் சுயாராஜ்யத்தை விட சுயமரியாதையேபிரதானமானதென்பது எனது தாழ்மையானதும் முடிவானதுமான கொள்கை. அச் சுயமரியாதைக்கு மகாத்மாவின் நிர்மாணத் திட்டமும் மறைவுபட்ட இந்த சமயத்தில் அரசியலிலுள்ள சகல பதவிகளையும் சகல ஸ்தானங்களையும் சகல அதிகாரங்களையும் சகல உத்தியோகங்களையும் எப்படியாவது நாம் கைப்பற்றியாக வேண்டும். ஆதலால் இப்பொழுது நடக்கிற தேர்தல் ஸ்தானங்கள் எல்லாம் இக் கருத்துக் கொண்ட பார்ப்பனரல்லாதார்களே கைப்பற்றும்படி நாம் செய்ய வேண்டும். அதின் மூலம் நமது கருத்தை நிறைவேற்றிக் கொள்ள எவ்வெவ் வழிகளில் சாத்தியப்படுமோ அவ்வவ்வழிகளிலெல்லாம் உழைக்கவேண்டும். இதுதான் நம்முடைய தேசிய வேலை. இதை விட்டு விட்டு காங்கிரஸ் என்றும் சுயாராஜ்யம் என்றும் காங்கிரஸ் மூலம் சுயாராஜ்யம் அடையலாமென்றும் சொல்லுவதெல்லாம் பார்ப்பனர் மூலம் மோட்சமடையலாமென்று சொல்லுவது போலத்தான் ஆகும்.

(தொடரும்)

# "தமிழ் நாடு".

சென்ற வாரம் சென்னையில் நடந்த கார்ப்பரேஷன் தேர்தல்களின் முடிவைப் பற்றி "தமிழ்நாடு" பத்திரிகை "காங்கிரசுக்கு ஆபத்து" என்னும் தலைப்பின் கீழ் எழுதிய தலையங்கத்தில் காணப்படும் சில முக்கிய விஷயங்களாவன:—

சென்ற புதன்கிழமையன்று சென்னையில் நடந்த கார்ப்பரேஷன் தேர்தலில் சுயராஜ்யக் கட்சியாருக்கு ஒரு ஸ்தானம் கூட கிடைக்காமல் போய்விட்டது. சென்ற வருஷம் நடந்த தேர்தலில்கூட காங்கிரஸ் கட்சிக்கு வெற்றி கிடைத்திருக்கிறது. அப்படியிருக்க, இந்தத் தேர்தலில் சுயராஜ்யக் கட்சி தோற்ற காரணமென்ன? சென்ற ஒரு வருடகாலமாக சென்னையிலுள்ள பிராமணத்தலைவர்கள் செய்து வந்த சூழ்ச்சிகளை ஜனங்கள் அறியத் தொடங்கி விட்டதே இந்தத் தோல்விக்குக் காரணமாகும். பிராமணரல்லாதாரை நசுக்கிவிட அவர்கள் (பிராமணர்கள்) கட்டுப்பாடாக செய்து வந்த சூழ்ச்சிதான் தேசியப் பிராமணர்களைக்கூட ஜஸ்டிஸ் கட்சியிடம் அநுதாபம் காட்ட வேண்டியதாய்ச் செய்து விட்டது. உத்தியோக வேட்டைக்காக காங்கிரசை வந்து தொத்திக்கொண்டிகிற பிராமணர்கள் எத்தனையோ பேர் இருக்கிறார்களென்பது உறுதி. பிரிட்டிஷ் சர்க்கார் இந்நாட்டில் நிலைபெற்றது முதல் பிராமணர்கள் உத்தியோக வேட்டையாடி வருகிறார்கள். ஜஸ்டிஸ்கட்சியார் சென்ற ஆறு வருடங்களாகத்தான் எங்களுக்கும் உத்தியோகம் வேண்டுமென்று கேட்கிறார்கள். இதில் என்ன தவறு இருக்கிறது? இது இயற்கைதானே. உத்தியோகம் வகிப்பது கூடாதென்றால், எல்லா வகுப்பாரும் வகிக்கக் கூடாதென்றுதான் சொல்லவேண்டுமே ஒழிய ஜஸ்டிஸ் கட்சியார் மட்டும் உத்தியோகம் வகிக்கக் கூடாதென்று சொல்ல யாருக்கு (பார்ப்பனருக்கு என்ன) அதிகாரமிருக்கிறது? யார் உத்தியோகத்திற்குப் போனாலும் இந்தக் காங்கிரஸ் பிராமணருக்கென்ன (இவ்வளவு கவலை?) சுயராஜ்யம் வேண்டுமென்று போராடி வருகிற ஒரு கூட்டத்தார், அவர் உத்தியோகத்திற்குப் போகிறார், இவர் உத்தியோகத்திற்குப் போகிறார் என்று சொல்லிக் கொண்டிருக்கவேண்டிய அவசியம் என்ன? ஆறு வயதாகிற ஜஸ்டிஸ் கட்சியாரை உத்தியோக வேட்டைக்காரர் என்று பிராமணர்கள் சொல்லுவார்களேயானால் 150 வருடங்களாக உத்தியோக வேட்டையாடி வருகிற இப் பிராமணர்களை என்னவென்று அழைப்பது? உத்தியோகங்களிலிருக்கிற பிராமணர்கள் தங்கள் பதவிகளை விட்டுவிட்டு வெளியே வந்து "நீங்களும் உத்தியோகங்களை விட்டு விடுங்கள்" என்று சொன்னால் அதை நியாயமென்று நாம் ஒப்புக்கொள்ளுவோம். இப்பொழுது ஜஸ்டிஸ் கட்சிக்காரரை உத்தியோக வேட்டைக்காரர் என்றழைக்கும் பிராமணர்கள் உத்தியோகங்களைத் துறந்த முனிவர்களல்ல. ஒருவர் இருவரைத் தவிர அனேகமாக அன்னக் காவடிகளாகவே (பிராமணர்களாகவே) இருக்கின்றனர். தங்கள் ஜாதியார் விடாப்பிடியாய்ப் பிடித்துக் கொண்டிருக்கும் உத்தியோகங்களைப் பற்றி ஒரு வார்த்தை கூட பேசாமல் ஜஸ்டிஸ் கட்சியாரைப் பற்றி கண்டபடி தூற்றிப் பேசவும் எழுதவும் இந்த அன்னக் காவடிகளுக்கு (பிராமணர்களுக்கு) என்ன யோக்கியதை இருக்கிறதென்று தெரியவில்லை.

ஜஸ்டிஸ் கட்சியார் பிராமணரல்லாதார் என்கிற பாவத்திற்காக உத்தியோகப் பிராமணர், காங்கிரஸ் பிராமணர், மிதவாத பிராமணர், குமாஸ்தா பிராமணர் முதலிய சகல பிராமணர்களும் அபிப்பிராய பேதமின்றி ஒன்று சேர்ந்து ஜஸ்டிஸ் கட்சியை எதிர்த்து வருகின்றனர். அவர்களின் (பிராமணர்களின்) துவேஷத்தை அறிய இந்துமதபரிபாலனச் சட்ட விஷயத்தில் பிராமணர்கள் நடந்து கொள்ளும் விதமே போதும். அல்லாமலும் ஸ்ரீமான் வரதராஜுலு நாயுடு ஆரம்பித்த குருகுலப் போராட்டத்தில் என்ன நடந்தது. தேசியப்போர்வை போட்டுக் கொண்டிருந்த பிராமணரும் வைதிகப் பிராமணருடன் சேர்ந்து கொண்டனர். சின்னக் காந்தி என்று ஏமாற்றி வந்த ஸ்ரீமான் ராஜகோபாலாச்சாரி முதல், ஆசாரத் திருத்தம் பேசி வந்த ஸ்ரீமான் சீனிவாசய்யங்கார் வரை எல்லோரும் ஒன்று சேர்ந்து கொண்டு தாங்கள் மேல் ஜாதி எனப் பேச ஆரம்பித்தார்கள். அன்று முதல் பிராமணர்கள் பேரிலுள்ள நம்பிக்கை பிராமணரல்லாதருக்கு தொலைந்து விட்டதென்றே சொல்லலாம். தேசியக் கிளர்ச்சியில் சேர்ந்திருக்கிற பிராமணர்கள் நியாய புத்தியுள்ளவர்களாய் இருந்திருந்தால் இன்றுள்ள பிராமணர் பிராமணரல்லாதார் சண்டை ஏற்பட்டிராது. அன்றியும் சில அயோக்கியர்களை ஏவிவிட்டு பிராமணரல்லாதாரை நக்கிப் பொறுக்கிகளென்றும், தலாம் கும்பலென்றும் திட்டச் சொன்னதாலும், தேர்தல்களில் (பிராமணர்களால்) கையாளப்படும் சூழ்ச்சிகளைப் பார்த்த பின்பும ஸ்ரீமான்கள் முதலியாரும் நாயுடுவும் காங்கிரஸ் நிர்வாகப் பதவியிலிருந்து விலகிக்கொண்டார்கள். இதற்காக உடனே சில பிராமணரல்லாத அன்னக்காவடிகளை ஏவிவிட்டு பிராமணரல்லாத தலைவர்களைப் பிரசங்கங்களில் திட்டும்படியும் பத்திரிகைகளில் தாக்கி எழுதும்படியும் செய்தார்கள். பணத்தைக்கொண்டு எல்லாம் செய்து விடலாமென்று எண்ணி ஸ்ரீமான் சீனிவாசய்யங்கார் பிராமணரல்லாதாரை அலட்சியமாக நினைத்தார். இதன் பலனை ஜனங்களின் மனம் அடியோடு மாறிவிட்டது. காங்கிரசுக்கு உண்மையாக உழைத்து ஜெயிலுக்குச் சென்ற தலைவர்களைக் கூலிக்கு மாரடிக்கும் சில அன்னக்காவடிகளை ஏவிவிட்டுத் திட்டும்படி செய்தால் ஜனங்கள் எப்படி பொறுத்துக்கொண்டிருப்பார்கள். ஒரு தேசியப் பிராமணனைவிட ஜஸ்டிஸ் கட்சியைச் சேர்ந்த ஒரு பிராமணரல்லாதார் எவ்வளவோ சிலாக்கியமானவர் என்கிற எண்ணம் ஜனங்களின் மனதில் பதிய ஆரம்பித்துவிட்டது. ஸ்ரீமான் சீனிவாசய்யங்கார். மந்திரி பதவிகள் ஒப்புக்கொள்ளுவது சம்மந்தமாய்ப் பேசிய பேச்சுகளும் வெளியாய் விட்டன. இவைகளின் பலன்தான் சென்ற புதன் கிழமை தேர்தலின் முடிவு. ஸ்ரீமான்கள் இராமசாமி நாயக்கர், சக்கரை, ஆரியா போன்றவர்களின் பணத்துயரத்தை அலட்சியம் செய்ய முடியாது. சுயநலம் பிடித்தத் தலைவர்களை நீக்கி விட்டால் அவர்கள் (நாயக்கர், சக்கரை, ஆரியா) மறுபடியும் வந்து சேருவதில் கஷ்டமிருக்காதென்று நினைக்கிறோம். ஆகவே இப்பொழுது தோற்றது யார்? பிராமணத் தலைவர்களின் சூழ்ச்சியே தோற்றது. பிராமணரல்லாதாரை நசுக்கிவிடலாமென்ற எண்ணமும் பணத்தால் எதையும் செய்துவிட முடியும் என்கிற நினைப்பும் அன்னக்காவடிகளைக் கொண்டு தங்களைக் காப்பாற்றிக் கொள்ளலாம் என்ற ஆசைகளுமே தொலைந்தன. பிராமணர்கள் சுயராஜ்யம் கேட்பது உண்மையானால் மேலே செய்யவேண்டிய வேலையைப் பற்றி உடனே யோசிக்கவேண்டியது அவசியமாகும். அதாவது அரசியல் விஷயத்தில் பிராமணர்களுக்கு எத்தனை ஸ்தானங்களென்பதை நிர்ணயித்தும், எல்லோருக்கும் சம உரிமையுண்டு, எல்லோரும் சமத்துவம் என்ற கொள்கையை ஒப்புக் கொண்டும் பிராமணரல்லாதாரின் முன்னேற்றத்திற்குப் பிராமணர்கள் இடையூறு செய்யாமல் இருக்கும்படி தங்கள் ஜாதியாரைக் கேட்டுக்கொண்டும் பிரபல பிராமணர்கள் கையெழுத்திட்டு உடனே ஒரு அறிக்கையை வெளியிட்டு அதன்படி நடக்க ஆரம்பித்தால்தான் இப்பொழுது பரவி வரும் ஜாதித் துவேஷத்தை அடக்கமுடியும். அப்படி இல்லாமல் பழைபடியே தங்கள் சூழ்ச்சி செய்து கொண்டு வருவார்களானால், அது நிச்சயமாய்ப் பார்ப்பனர்களுக்கு ஆபத்தையே விளைவிக்குமென்று எச்சரிக்கை செய்கிறோம். இவ்வெச்சரிக்கையைத் தள்ளிவிடவோ, எடுத்துக் கொள்ளவோ, அவர்களுக்கு பூரண உரிமை உண்டு. ஆனால் கர்மத்திற்குத் தக்க பலன் கிடைப்பது உறுதி என்பதை மட்டும் அவர்கள் அறியவேண்டும்.

---

13-நாவல்கள் நிறைந்த

## ஆனந்த கதாகல்பம்.

இதில் அநேக அபூர்வ நாவல்கள், அதிசயக் கதைகள், ஆனந்த நாடகங்கள், விகடங்கள், விநோதங்கள், கடிதங்கள் விடு கதைகள், மாயப்படங்கள், அழகிய சித்திரங்கள், வியாசங்கள் 500 குடும்ப ரகசியங்கள், 300 அநுபவ போதனைகள், நவீன கீதங்கள், இன்னும அநேக விஷயங்களும் உள்ளன. முன் சம்பந்தமில்லாத தனித் தனி வால்யங்களாகும். 3-ம் வால்யம் ரூ. 3. 4-ம் வால்யம் ரூ. 3.

---

தமிழ் சுருக்கெழுத்துக்காரர்

## தேவை.

தமிழில் சொல்வதையும் பிரசங்கிப்பதையும் சுருக்கெழுத்தில் (Short Hand) எடுத்து எழுதக்கூடிய ஒரு தமிழ் சுருக்கெழுத்துக்காரர் தேவை. அவருக்கு ஆங்கிலமும் தெரிந்திருக்க வேண்டுமென்பது அவசியமல்லை. தமிழ் சுருக்கெழுத்து எழுதுவதில் கெட்டிக்காரராயும் வாலிபராயுமிருத்தல் வேண்டும். சம்பளத்தைப்பற்றிக் கடித மூலமாய்த் தெரியப்படுத்திக் கொள்ளலாம்.

காரியஸ்தர், "குடி அரசு" ஈரோடு.

## நாகையில் பார்ப்பனரில்லாத திருமணமும், பிரார்த்தனையும்.

———o———

நாகபட்டணம் தென் இந்தியா ரயில்வேயைச் சேர்ந்த தொழிலாளரும் ஸ்ரீமான் பாலையத்தேவர் குமாரருமான ஸ்ரீமான் பா. காளியப்பத் தேவர் அவர்களுக்கும் பட்டுக்கோட்டையைச் சேர்ந்த படப்பக்காட்டிலிருக்கும் ஸ்ரீமான் இராசாமித் தேவரவர்கள் குமாரத்தி ஸ்ரீமதி செல்லம்மாளுக்கும் இவ் வாவணி-௴ மூன்றாந்தேதி (19-8-26) வியாழக்கிழமை காலை 10-மணிக்கு நாகை கோட்டைமேட்டுத் தெருவில் உள்ள மணமகன் இல்லத்தில் திருமணம் நடைபெறும். அத்திருமணத்தில் மணமகனும் மணமகளும் கதராடையே அணிவதுடன் பார்ப்பனர் சம்மந்தமே இல்லாமல் அத்திருமணச் சடங்கும் நடைபெறும். நம தென்னாட்டில் இம்மாதிரி கதருடையுடன் இதுவரை பல திருமணங்கள் நிகழ்ந்திருந்தாலும் பார்ப்பனப் புரோகிதரில்லாமல் திருமணங்கள் நடப்பது அதிசயமாகக் கருதப்படுவதால் வெகு சில திருமணங்களே இதுவரை நடைபெற்றிருக்கின்றன. அவற்றுள் சென்ற மாதம் வட ஆற்காடு ஜில்லா ஆம்பூர் சானாங்குப்பத்திலிருக்கும் திருவாளர்கள் வெங்கிடசாமி முதலியாரும் அவரது உறவினர் இருவரும் சேர்ந்து நடத்தின வைத்த மூன்று திருமணங்களும் நாகையில் நடக்கப்போகும் இத் திருமணமும் முக்கியமானதென்றே சொல்லலாம். இனியும் தமிழ் நாட்டில் நடக்கும் அநேக திருமணங்களும் இதுபோலவே தங்கள் தங்கள் வகுப்பிலுள்ள முதிர்ந்த பரிசுத்தம் பொருந்திய பெரியோர்களைக் கொண்டே நடத்திக் கொள்வது திராவிட மக்களின் சுயமரியாதையைக் காப்பதாகுமென்று விண்ணப்பித்துக்கொள்ளுகிறோம். சுமார் 30, 40 வருஷங்களுக்கு முன்னால் தென்னாட்டில் விசேஷமாய்ப் பார்ப்பனரின்றியே விவாகம் முதலிய அநேக சடங்குகளும் நடைபெற்று வந்திருக்கிறது.

முக்கியமாய் இன்னாட்டுக் கொங்குவேளாள சமூகமாகிய பெரும் சமூகத்தார் தங்கள் மணச் சடங்குகளைத் தங்கள் சமூகத்திலேயே உள்ளவரான அருமைக்காரர் என்னும் பெரியார்களைக்கொண்டே நடப்பித்து வந்திருக்கிறார். கொஞ்சம் செல்வமோ, அல்லது நாகரிகப் பேயோ எதாவது ஒரு குடும்பத்திற்குப் புதிதாய் ஒட்டிக்கொண்டால் அவர்கள் பார்ப்பனரைக்கொண்டு சடங்குகள் செய்வது ஒரு பெருமை என்று நினைத்தவர் பார்ப்பனர்களை இருத்து நடத்தவேண்டும் என்று செய்துவிட்டார்கள். இன்னமும் அவ் வகுப்புக்களிலும் மற்றும் பல வகுப்புகளிலும் 100-க்கு 90 குடும்பங்கள் பார்ப்பனர் இல்லாமலே நடைபெற்று வருகின்றன. சிராத்தம் முதலிய சடங்குகள் வேளாள சமூகமாகட்டும், வணிஜ சமூகமாகட்டும் மற்றும் பல சமூகங்களாகட்டும் இப்பொழுதும் பெரும்பான்மையான குடும்பங்கள் பார்ப்பனரைக் கொண்டு செய்வதே இல்லை. இப்படி இருந்தும் பார்ப்பனர்கள் சூழ்ச்சியினால் பார்ப்பனர்களைக் கொண்டு செய்யும் சடங்குகளுக்கு ஒரு பெருமை இருப்பதாகக் கருதிப் புதிது புதிதாய் அவ்வழக்கங்களை ஸ்தாபித்து வருகிறார்கள். இவை பார்ப்பனர்கள் வயிறு பிழைப்புக்கு அனுகூலமே தவிர நமக்காவது நமது பெற்றோர்களுக்காவது நமது மணமக்களுக்காவது யாதொரு பயனும் இல்லை. அவர்கள் சொல்லும் மந்திரங்கள் என்னும் சமஸ்கிருத வார்த்தைகளிலும் யாதொரு விசேஷப் பொருளும் இல்லை. அதைச் செய்து வைக்கும் புரோகிதர்களோ உபாத்தியாயர்களோ அப்படி ஒன்றும் விசேஷ சக்தியோ யோக்கியதையோ பெருமையோ படைத்தவர்களுமல்ல. வீண் பிரமையும் போலி நாகரிகம் என்கிற முட்டாள் தனமுமே யல்லாமல் இதில் வேறு ஒரு பலனும் இல்லை. உண்மையாகவே பார்ப்பனர் இல்லாமலும் பார்ப்பனரைக் கொண்டு சடங்குகள் செய்யாமலும் சிராத்தம் தர்பணம் முதலிய பார்ப்பனர் வயிர் வளர்க்கும் போலிச் சடங்குகளில்லாமலும் இருக்கும் ஜனங்களும் சமூகமும் ஜாதியும் சேர்த்து கணக்குப் பார்த்தால் இவைகளையெல்லாம் பார்ப்பனர்களைக் கொண்டு செய்கிறவர்களைவிட எத்தனையோ பங்கு அதிகமாய்த் தானிருப்பார்கள். இதினாலேயே அவர்கள் க்ஷேமமாய் வாழவில்லை யென்றாவது அவர்கள் பெற்றோர் மோக்ஷம் அடையவில்லை என்றாவது சொல்லி விட முடியுமா.

ஆதலால் பார்ப்பனரல்லாத இந்து மக்கள் இனி மேலாவது தங்கள் சுயமரியாதையும் சுதந்திரத்தையும் உத்தேசித்தாவது பார்ப்பனர் இருந்து நடத்தும் காரியங்கள்தான் உண்மையானது என்றும் உயர்ந்தது என்றும் கடவுளும் மோக்ஷத்திற்கும் பிரியமானது என்றும் பார்ப்பனர்கள் உயர்ந்தவர்கள் என்றும் எண்ணி தங்கள் தங்கள் சமூகத்தையே தாழ்த்திக் கொள்வதற்குத் தாங்களே பணங்கொடுத்து ஆளாகாமல் தங்கள் தங்கள் சமூகத்தாரைக் கொண்டே செய்துகொள்ள வேண்டுமாய் பிரார்த்திக்கிறோம்.

குறிப்பு:—இத்திருமணத்திற்கு ஸ்ரீமான் நாயக்கரையும் அவசியம் வரும்படி வேண்டிக் கொண்டிருப்பதால் அநேகமாய் ஸ்ரீமான் நாயக்கரும் போகலாம்.

## வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம்.

——:0:——

### ஸ்ரீமான் S. சத்தியமூர்த்தி அய்யர்.

சென்ற வாரம் வெள்ளிக்கிழமை சென்னை கோகலே மண்டபத்தில் ஸ்ரீ எஸ். சத்தியமூர்த்தி அய்யர் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தைப் பற்றி பேசியதில் கடைசியாக "பிராமணர் - பிராமணரல்லாதாரின் நம்பிக்கைக்கு பாத்திரமாகு வண்ணம் நடந்து கொள்ளவேண்டும். உத்தியோக விஷயத்தில் பிராமணரல்லாதாருக்கு நியாயமாகவே குறையிருக்கிறது. அக்குறையில்லாதபடி பிராமணர்கள் நடந்துகொள்ளவேண்டிய தவசியம்" என்று பேசியிருக்கிறார். இது மிகவும் சரியான வார்த்தை; நாமும் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் கேட்பதற்கு இந்தக் குறைகளைத்தான் சொல்லுகிறோம். வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் கிடைத்தால்தான் இக் குறைகள் நீங்கும்; அல்லது சுவாமி சிரத்தானந்தர் சொன்னபடி செய்தாலாவது கொஞ்சம் நீங்கலாம். இரண்டுமில்லாமல் ஸ்ரீமான்களான குழந்தையும் ஓ. கந்தசாமி செட்டியாரையும் பாவலரையும் ஜயவேலரையும் பிடித்து வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் வேண்டாம் என்று சொல்லச் செய்வதாலும் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் கேட்பவர்களைத் திட்டச் செய்வதினாலும் இக்குறை நீங்கிவிடுமா? என்று கேட்கிறோம்.

———

## பார்ப்பனரின் பிறப்புரிமை.

வங்காள அரசாங்கத்தார் ஒற்றுமையும் சமாதானமும என்னும் பெயரால் பண்டித மாளவியா அவர்களுக்கும் டாக்டர் மூஞ்சே அவர்களுக்கும் வங்காளத்திற்குள் பிரவேசிக்கக்கூடா தென்பதாக 144 உத்திரவு போட்டார்கள். அவற்றை இவ் இரு கனவான்களும் வீரர்களைப் போல மீறி நடந்தார்கள். அம்மீறுதலானது கேவலம் வகுப்புப்பிரச்சினையை உத்தேசித்தே மீறினார்கள். என்று நாம் நினைக்க ஏற்பட்டபோதிலும் இக் கனவான்களுடைய புதிய வீரத்தை நாம் மனதில் பாராட்டினோம்.

அம்மீறுதலின்பேரில் சர்க்கார் நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள் என்று தெரிந்தும் இம் மகிழ்ச்சிக்கு அதிக ஆயுள் இருக்காதென்று நாம் சந்தேகப்பட்டதுண்டு. அதுபோலவே இப்பொழுது பண்டிதர் பேரிலும் டாக்டர் மூஞ்சே அவர்கள் பேரிலும் நடவடிக்கை எடுத்துக் கொள்ளக் கூடாதென்று ஸ்ரீமான்கள் சர். சிவசாமி அய்யர், டி. ரங்காச்சாரியார் முதலிய பார்ப்பனர்கள் அரசப்பிரதிநிதியிடம் போய்ப் பல்லைக் கெஞ்சுவதாய்த் தெரியவருகிறது. ஜனங்களை ஏமாற்றுவதற்கு ஒரு புறம் வீரமும் சர்க்காரை ஏமாற்றுவதற்கு மற்றொரு புறம் பல்லைக் கெஞ்சுவதும் நமது பார்ப்பனர்களுக்கு பிறப்புரிமை என்பது இதனால் விளங்கவில்லையா?

### ஓர் வேண்டுகோள்.

உத்தர கீதை, தமிழில் அச்சாயிருப்பின் அது விபரமும் அந் நூல் கிடைக்கு மிடமும் தெரிவிப்போர்க்கு நன்றி செலுத்த கடமைப் பட்டுள்ளேன்.

சி. சுப்பைய முதலி,
பருத்தியிதை மண்டி,
கோயமுத்தூர்.


## மதனகேசரி

இணையற்ற மகா தாதுபுஷ்டி லேகியம்.

இது அபார சக்தி வாய்ந்தது. தேகம் வலுக்கும். மூளை, இருதயம், குண்டிக்காய்களுக்கு வலுவேற்றும். நரம் ஸ்தானங்களைப் பலப்படுத்தும். அபரிமிதமான தாது விருத்தி, இரத்த விருத்தி, போகசித்தி உண்டாக்கும். தாது புஷ்டிக்கு நிகரற்ற மகா உயர்ந்த சாலாமிசிரி சஞ்சீவி இதுவே.

1 டின் ரூ. 3. வி. பி. அறை ௦.

பிராஜானுகூல ஔஷதாலயம் ஸ்ரீரங்கம்

## திரு. நாயக்கர்

திரு. ஈ.வெ. இராமசாமி நாயக்கரவர்கள், கும்பகோணத்தில் 14, 15, தேதிகளில் நடைபெறும் சோழிய வேளாள 3-வது மகாநாட்டிற்கு வருவதாய் முன்னமே ஒப்புக்கொண்டிருந்தபிரகாரம் 13-ந்தேதி இரவு புறப்பட்டுச் சென்றுள்ளார். உடல் நலம் இடங்கொடுத்தால் அங்கிருந்து, 16-ந் தேதி மாயவரம் செல்லுவார். 19-ந் தேதி நாகை திரு. பா. காளியப்பன் திருமணத்திற்குச் சென்றுவிட்டு அன்றிரவு ஈரோட்டுக்குத் திரும்பி 20-தேதி காலை ஈரோடு சேர்ந்து, பகல் பெருந்துறைக்குச் சென்றுவிட்டு அன்று இரவிலேயே கோலார் தங்கவயல் இராபர்ட்சன் பேட்டையில் நடைபெறும் ஜீவகாருண்ணியச் சங்கத்தின் 6-வது ஆண்டு விழாவிற்குச் சென்று, அங்கிருந்து 23-ந் தேதி பெரம்பலூரில் நடைபெறும் பார்க்கவ குல மகாநாட்டிற்குப் போகுறுவார். பிறகு ஈரோடு வந்து இரண்டு நாள் தங்கி 26-ந் தேதி பாப்பாரப்பட்டியில் நடக்கும் ஷண்முகானந்த சபை ஆண்டு விழாவிற்குச் செல்லுவார்.

## ஒரு வேடிக்கை.

### இந்து முஸ்லீம் ஒற்றுமைக்குப் பரிகாரம்.

"சுதேசமித்திரன்" ஆகஸ்ட் 7-உ பத்திரிகை 10-ம் பக்கம் 4-வது கலத்தில் "இந்து முஸ்லீம் ஒற்றுமை" என்ற தலையங்கமிட்டு "தேசத் தலைவர்கள் எவ்வளவோ பாடுபட்டும் எங்கும் ஒற்றுமை நிலவாமல் சச்சரவுகள் நடந்து வருகின்றன. ஆனால் எங்கள் ஆதங்க நிக்கிரக மாத்திரைகள் அவர்களுக்குண்டாகும் கஷ்ட நிஷ்டூரங்களை நிவர்த்தி செய்து ஒற்றுமையை நிறைவேற்றி வைக்கின்றன" என்று எழுதியிருக்கிறான். ஆதங்க நிக்கிரக மாத்திரை நரம்புத் தளர்ச்சியைப் போக்குமாம். அப்படியானால் நரம்புத் தளர்ச்சியினால் தான் இந்து முஸ்லீம் கலகம் இருப்பதாய் வைத்துக்கொண்டாலும் அந்த நரம்புத்தளர்ச்சி யாருக்கு இருக்கிறது? இந்துக்களுக்கு இருக்கிறதா? முகமதியர்களுக்கு இருக்கிறதா? தயவுசெய்து "மித்திரன்" இதற்குப் பதில் சொல்லுவானா?

---

## பிராமணீயக் கொடுமை.

இந்தியாவின் ஒற்றுமையைக் குலைப்பது
பிராமணீயம்!
இந்தியாவை வேற்றரசர் கையில் கொடுத்தது
பிராமணீயம்!
இந்து முஸ்லிம் கலகங்களை மூட்டுவது
பிராமணீயம்!
தமிழரை வறுமைக்குள்ளாக்கியது
பிராமணீயம்!
இந்தியா சுயராஜ்யம் அடையவதற்குத்
தடை கல்லாயிருப்பது பிராமணீயம்!
உடன் பிறந்த சகோதரர்களான தமிழர்கள்
அடித்துக் கொள்ளவும் நீதி மன்ற மேறி
வழக்காடவும் காரண பூதமாயிருப்பது
பிராமணீயமே!
தமிழர்களே இந்தப் பாழான பிராமணீயத்தை
நாட்டை விட்டு ஓட்டுக.

## டாக்டர் நாயுடுகாரின் விரகர்ச்சனை.

—:o:—

இந்து தேவஸ்தான மசோதாவைப்பற்றி பார்ப்பனர்கள் தங்கள் சுய நலத்திற்காக எதிர்க்கக் கட்டைப் பட்டிருந்தாலும் அதைத் தாங்களே எதிர்ப்பதற்குப் போதுமான தைரியமும் யோக்கியதையும் இல்லாததால், குரங்கு கையில் பூமாலை கிடைத்தது போல். தங்கள் கையில் சிக்கி நசுக்குண்டு கொண்டிருக்கும் காங்கிரசை இதற்காக உபயோகப்படுத்திக்கொண்டு காங்கிரசின் பெயரால் இந்துமததர்மபரிபாலன மசோதாவை சுயராஜ்யக் கட்சியார் எதிர்க்கவேண்டுமென்று ஒரு பொருளற்ற உத்திரவை போட்டுக்கொண்டு வரப்போகும் சட்டசபையில் பல பார்ப்பனரும் அவர்களது சிஷ்யகோடிகளும் எதிர்க்கப் போகிறார்களாம். இதையறிந்த நமது டாக்டர் வரதராஜுலு நாயுடுகார் அவர்கள் விரகர்ச்சனை முழங்கியுள்ளார். அதாவது:—

"இப்பொழுது சட்டசபையில் வரப்போகும் சீர்திருத்தம் பெற்ற இந்துமத பரிபாலனமசோதா சம்பந்தமான விவாதம் அரசியல் கட்சிப் பிரச்சினை அல்ல. ஸ்ரீமான் ஆர். கே. ஷண்முகம் செட்டியார் உள்பட காங்கிரஸ்காரர்கள் இம்மசோதாவை ஆதரிக்கிறார்கள். மசோதாவை சுயராஜ்யக்கட்சியார் சட்டசபைக்குப் போய் எதிர்ப்பது இம்மாகாணத்தில் காங்கிரசுக்கே அழிவு தேடுவதாகும். ஆதலால் சட்ட சபையிலுள்ள சுயராஜ்யக் கட்சி சட்டசபை அங்கத்தவர்கள் கண்டிப்பாய் இவ்விஷயத்தில் நடுநிலைமை வகிக்கவேண்டுமென்று வேண்டிக்கொள்ளுகிறேன். அரசியலில் வேற்றுமை இருந்தாலும் சென்னை அரசாங்கத்திற்குக்கூட இது சம்பந்தமாய் நான் ஒரு தந்தி அனுப்பியிருக்கிறேன்.

"அதாவது, வெளியிடப்பட்டிருக்கும் இந்துமதபரிபாலன மசோதாவை எல்லா பார்ப்பனரல்லாதாரும் முழுமனதுடன் ஆதரிக்கிறார்கள். மசோதாவுக்கு விரோதமாய்ச் செய்யப்படும் கிளர்ச்சியானது சுய நலத்தை உத்தேசித்து சில சுய நலக்காரரால் நடத்தப்படும் பொய்க் கிளர்ச்சியாகும். இது விஷயமாய் அரசாங்கத்தாரோடு ஒத்துழைக்கவும் தயாராயிருக்கிறேன்"

என்று பார்ப்பனருக்கும் அரசாங்கத்திற்கும் தந்தி கொடுத்திருக்கிறார். ஆனால் இதற்கு மேல் ஸ்ரீமான் ஆர். கே. ஷண்முகம் செட்டியார் என்ன செய்யப் போகிறாரோ தெரியவில்லை எப்படியிருந்தாலும் இதை நாம் முழுமனதோடு போற்றுவதோடு மனப் பூர்வமாய் ஆதரிக்கவும் செய்கிறோம். இப்பார்ப்பனர்களின் கொடுமையானது அதிலிருந்து தப்புவதற்குத் தீவிர தேசியவாதிகளை ஜஸ்டிஸ் கட்சியாரோடு சேரும்படி செய்வது மாத்திரமல்லாமல் சர்க்காரோடும் ஒத்துழைக்கச் செய்கிறது. இனியும் நமது பார்ப்பனர்களின் சூழ்ச்சியும் கொடுமையும் வெளியாக வெளியாக இன்னமும் என்னென்ன செய்யச் சொல்லுமோ வென்பதை இப்பொழுது நம்மால் நிர்ணயிக்க முடியவில்லை. இயற்கை தேவிதான் அறிவாள்.


## முறியடிக்கப்பட்டவர்களுக்கு "மித்திரனி"ன் நற்சாக்ஷிப் பத்திரம்.

—o—

சென்னைத் தேர்தல்களில் பார்ப்பனரல்லாத கட்சியாருக்கு வெற்றி ஏற்பட்டதைப் பற்றி "மித்திரன்" தன் திருப்தி செய்து கொள்ளுகையில், சென்னை வெற்றி, பார்ப்பனரல்லாத கட்சியாராய ஜஸ்டிஸ் கட்சிக்கு வெற்றியல்லவென்றும், ஜஸ்டிஸ் அபேட்சகர்களான தனவான்கள் அந்தந்த பேட்டை ஓட்டர்களுக்குச் செய்த சேவையினாலேயே அவர்களுக்கு வெற்றி கிடைத்ததென்றும் சொல்லுகிறான். இதிலிருந்தே பார்ப்பனக் கட்சியாய சுயராஜ்யக் கட்சியாரின் சார்பாய் நிறுத்தப்பட்ட அபேட்சகர்களை ஓட்டர்கள் மதிக்கவில்லை என்றும் இவர்கள் நன்மை செய்வார்கள் என்று ஓட்டர்கள் நினைக்கவில்லை என்றும் ஏற்படுகிறது. இதைப் பார்க்கும்போது, ஐயோ பாவம்! நமது ஸ்ரீமான் ஒத்தக்காசு செட்டியாரை இப்பார்ப்பனர்கள் பழைய குரோதத்தை மனதில் வைத்துக்கொண்டு எந்தெந்த விதத்தில் கெடுத்துவிட்டார்கள்—கெடுத்து வருகிறார்கள்—என்பதை நினைக்கும்போது செட்டியார் பேரில் அளவு கடந்த பரிதாபமேற்படுகிறது.

ஸ்ரீமான் செட்டியாரின் மான நஷ்ட வழக்கில் செட்டியார் மானம் ஒத்தக்காசு தான் பெறும் என்று தீர்ப்பு வாங்கிக் கொடுத்துவிட்டார்கள். ஸ்ரீமான் செட்டியார் தனது பேராசையினிமித்தம் தனது பட்டத்தையும் விட்டு ஏமாறினார் என்கிற பெயர் வாங்கிக்கொடுத்து, பட்டத்தையும் பிடுங்கிவிட்டார்கள். போதாக்குறைக்கு சென்னைத் தேர்தலில் ஸ்ரீமான் செட்டியார் தோல்வியுற்றதற்குக் காரணம் ஓட்டர்களுக்கு செட்டியாரிடத்தில், தங்களுக்கு நன்மை செய்வார்கள் என்கிற, நம்பிக்கையில்லாததால்தான் ஓட்டு கிடைக்கவில்லை என்று சொல்லிவிட்டார்கள். ஸ்ரீமான் செட்டியார் வெற்றி பெற்றிருந்தால் அது செட்டியாரின் நல்ல குணத்திற்கு அல்லவென்றும் சுயராஜ்யக் கட்சியாரிடத்தில் ஜனங்களுக்குள்ள மதிப்பு என்றும் சொல்லிக்கொள்ளுவார்கள். ஸ்ரீமான் செட்டியார் தோற்றதால் அது சுயராஜ்யக் கட்சிக்கு ஜனங்களிடத்தில் உள்ள வெறுப்பும் அவநம்பிக்கையும் அல்லவென்றும் செட்டியாரிடத்தில் ஜனங்களுக்கு நம்பிக்கையில்லாததால்தான் என்றும் சொல்லிவிட்டார்கள். நாளைக்கு சென்னை சட்ட சபைத் தேர்தலில் செட்டியார் அவர்கள் அநேகமாய்த் தோற்றுப் போகலாம். அப்போது செட்டியாரைப்பற்றி என்ன சொல்லுவதற்குத் தயாராயிருக்கிறார்களோ தெரியவில்லை.

எப்படியாவது நமது ஸ்ரீமான் செட்டியாருக்கு நாள் கழிந்தால் போதும்; யார் என்ன சொன்னாலும் கவலை இல்லை போல் இருக்கிறது. செட்டியாரின் பரிதாப நிலைக்கு நாம் மிகுதியும் இரங்குகிறோம்!



அனைத்துயிர் ஒன்றென்றெண்ணி
அரும்பசி யெவர்க்கும் ஆற்றி
மனத்துளே பேதாபேதம்
வஞ்சகம் பொய் களவு சூது
சினத்தையும் தவிர்ப்பாயாகில்
செய்தவம் வேறொன்றுண்டோ
உனக்கிது உறுதியான
உபதேசம் ஆகும்தானே

குடி அரசு.

அக்ஷய-ஹு ஆடி-மீ 31 உ

# உஷார்! உஷார்!! உஷார்!!!

# பார்ப்பனர்களின் புதிய தந்திரம்.

—:o:—

இந்தியாவின் நன்மையின் பொருட்டும் மக்களின் சம உரிமையின் பொருட்டும் மகாத்மா காந்தியால் ஏற்படுத்தப்பட்ட நிர்மாணத்திட்டமும் பகிஷ்காரத்திட்டமும் கொண்ட ஒத்துழையாமையை காங்கிரசின் மூலம் நடத்தப்பட்டு வந்த காலத்தில் நாட்டில் சுய நலம் படைத்த பார்ப்பனர்களும் ஆங்கிலம் படித்த அடிமைகளும் தவிர மற்றவர்களுக்குள் ஒற்றுமையும் நம்பிக்கையும் கூடிய வரையில் கட்டுப்பாடும் இருந்து வந்தது என்பதையாரும் மறுக்க மாட்டார்கள். அதற்கு முன் இருந்து வந்த வகுப்பு உணர்ச்சிகளுக்கும், வகுப்புத் தந்திரங்களுக்குங்கூட பலம் குறைந்திருந்தது என்பதையும் யாரும் மறுக்கமாட்டார்கள்.

அவ்விதமிருந்த தேசத்தை, அது முன்னேறி நிர்மாணத்திட்டமும் பகிஷ்காரத்திட்டமும் வெற்றி பெற்று மக்கள் சமத்துவமும் சுதந்திரமும் அடைந்து விட்டால் 'வாழமுடியாத' வகுப்பார்களாகிய வஞ்சகப் பார்ப்பனர்களும் ஆங்கிலம் படித்த அடிமைகளும் இவற்றை எதிர்த்துப் பலவித சூழ்ச்சிகளால் கூடவேயிருந்து குடியைக் கெடுத்து தேசத்தின் மக்களை பழயபடி உயர்வு தாழ்வு வித்தியாசத்திலும் அடிமை வாழ்வில் பிழைக்க வேண்டிய அவசியத்திலும் கொண்டு வந்து விட்டு விட்டார்கள். இதன் பலனாய் இப்போது தேசத்தில் எங்கு பார்த்தாலும் பழயபடி வகுப்பு உணர்ச்சிகள் பெருகி, ஒவ்வொரு வகுப்பாரும் தங்கள் தங்கள் சுயமரியாதையையே சுதந்திரம் என்பதாகக் கொண்டு, தங்கள் தங்கள் முன்னேற்றத்திற்குப் பாடு படுகிறார்கள். இப்படிப் பாடு படுவதானது சாது ஜனங்களை ஏமாற்றி ஏற்கனவே பல சுதந்திரங்களும் சௌகரியங்களும் செய்து வைத்துக் கொண்டிருக்கிற பார்ப்பனர்களுக்கு தங்கள் அதிகாரமும் அதிக சுதந்திரமும் போய் விடுமே என்கிற கவலை ஏற்பட்டு, பொது மக்கள் அடையும் சமத்துவத்திற்கும் முற்போக்கிற்கும் முட்டுக்கட்டையாய் இருக்கவேண்டியது (நம்நாடு பார்ப்பனர்களின் வேதக்கடமையாய்ப் போய் விட்டது. இதற்காக ஆங்காங்குள்ள பார்ப்பனர்கள் ஒன்று கூடி எவ்வளவோ சூழ்ச்சிகளும் பகீரதப் பிரயத்தனங்களும் செய்து பார்க்கிறார்கள். உதாரணமாக வர்ணாசிரம சபை, இந்து மகா சபை, சங்கதன் சுத்தி, சுயராஜ்யக்கக்ஷி, பெங்கால் பேக்ட், இந்தி பாஷை, இரட்டை, ஆக்ஷியை ஒழித்தல் ஆகிய இவ்வளவு இயக்கங்களும் பார்ப்பன ஆதிக்கத்தை நிலை நிறுத்தவும் ஆங்கிலம் படித்த ஒரு சிலர் வயிறு வளர்க்கவும், பொது மக்கள் சமத்துவமும் சுயமரியாதையும் பெறுவதையும் பிற்பட்டவர்கள், தாழ்த்தப்பட்டவர்கள், ஒதுக்கப்பட்டவர்கள் ஆகியவர்கள் விடுதலை பெற்று முன்னேறுவதைத் தடுக்கவும், முட்டுக்கட்டை போடவுமே ஏற்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். ஆனாலும் இப்போது வெ வ பாமர ஜனங்கள் இவைகளை உணர்ந்து, இப்பார்ப்பனர்களின் சூழ்ச்சி வலையில் சிக்காமலும், சிக்கினவர்களும் சூழ்ச்சியை அறிந்து வெளிவருவதாலும் நமது பார்ப்பனர்களுக்கு இதுவரையில் ஏற்பட்டிருந்த கவலையைவிட இப்போது கொஞ்சம் அதிகமான கவலை ஏற்பட்டு, இதற்கு வழி தேடுகிறார்கள். தற்காலம் நமது நாட்டில் பார்ப்பனர்கள் ஆதிக்கத்தில் இருக்கும் எவ்வித ஸ்தாபனங்களுக்கும் பாமர ஜனங்களிடையில் மதிப்பில்லாமல் போய் விட்டபடியால், புதிதாய் ஒரு ஸ்தாபனத்தை உண்டாக்கி அதன் மூலம் ஜனங்களை மயக்க நமது பார்ப்பனர்கள் புதியதொரு தந்திரம் கண்டு பிடித்திருக்கிறார்கள்.

அது என்னவென்றால், "தேசீய ஒற்றுமைச் சங்கம்" என்பதாக ஒன்றைப் புதிதாகத் தாங்களே சிருஷ்டித்து அதில் இரண்டொரு ராஜீய விளம்பரக்காரர்களிடம் கையெழுத்து வாங்கி தாங்களும் கையெழுத்திட்டு இன்னும் பல சுயநலத்திற்காக எதையும் தியாகம் செய்யத்தக்க "தியாக புருஷர்களின்(?)" கையெழுத்தையும் வாங்கப் போகிறார்கள்.

இந்து மகா சபை போலவே இச் சங்கத்தை ஒவ்வொரு ஊரிலும் ஸ்தாபிப்பார்கள். அதில் வகுப்பு நலன் நாடுபவர்கள் யாவரும் சேர்த்துக் கொள்ளப்பட மாட்டார்களாம். இது ஒரு புதிய தந்திரமென்றே சொல்லுவோம்.

தமிழ் நாடு சார்பாய், ஸ்ரீமான்கள் சினிவாச சாஸ்திரிகளும், சினிவாசய்யங்காரும் கையெழுத்திட்டிருக்கிறார்களாம். இந்த இரண்டு பெரியார்களும் வகுப்பு உணர்ச்சியே இல்லாதவர்கள் போலும்! சமத்துவமே ஒரு உருவாய் வந்தவர்கள் போலும்! இருவர்களும் மகாத்மாவையும் ஒத்துழையாமையையும் ஒழித்ததற்குக் கொஞ்சங்குறைய முழுப் பொறுப்பாளிகள். பண்டித மாளவியா அவர்களும் இதில் சேர்ந்து விட்டால் மூவரும் முழுப் பொறுப்பாளிகளாய் விடுவார்கள்.

இந்த சிகாமணிகள் தேச நன்மைக்குப் பாடுபடுகிறவர்களாம். இந்தியாவின் முட்டாள் தனத்தாலும், அடிமைத் தனத்தாலும் அன்னியர்களுக்கு ஒற்றர்களாயிருப்பதாலுமே வாழவேண்டிய இந்த "பிரபுக்கள்,- இந்தியா சமத்துவமும் சுதந்திரமும் அடைந்த உடன் இந்த நாட்டை விட்டு ஓடவோ அல்லது இந்தியாவிற்கு வேற்றரசரைக்கூட்டி வரவோ வேண்டிய அவசியமுள்ள இந்த "வீரர்கள்" இந்தியாவின் நன்மையை நாடுவதற்கு எப்படி அருகர்களாவார்கள்? இவர்கள் எப்படி நம்முடைய பிரதிநிதிகள் என்று சொல்லிக்கொள்ள யோக்கியதை உடையவர்கள் ஆவார்கள்? ராஜீய-மத-வகுப்பு உணர்ச்சி உள்ளவர்களே இதில் சேரக்கூடாது என்று சொல்லி ஒரு சங்கம் ஸ்தாபித்தால், அதில் யார் போய்ச் சேரக்கூடும்? ராஜீயத்தை அன்னியனுக்குக் காட்டிக்கொடுக்கத் தயாராயிருக்கிறவனும் மதம் இல்லாதவனும் தான் எந்த வகுப்பு என்று தெரிந்துகொள்ள முடியாதவனும் அல்லாமல் வேறு யாராவது இந்த சங்கத்தில் சேரக்கூடுமா என்பது நமக்கு விளங்கவில்லை. மனிதனாய்ப் பிறந்த ஒருவன் தனது தேசாபிமானம் இல்லாமல் எப்படி இருக்க முடியும்? அதுபோலவே தனது மதாபிமானமும் குலாபிமானமும் இல்லாமல் எப்படி இருக்க முடியும்? இம் மூன்றையும் விட்டு விட்டு இப்பார்ப்பனர்களிடம் வந்து ஒருவன் அனுபவிக்கப் போகிற லாபம் என்ன? இச் சங்கம் என்பது தற்காலம் ஒவ்வொரு மதஸ்தாகளுக்கும் ஒவ்வொரு வகுப்பாருக்கும் ஏற்பட்டிருக்கும் சுயமரியாதை உணர்ச்சியைக் கொல்ல ஏற்பட்ட சங்கமே அல்லாமல் வேறல்லவென்றே கூறுவோம். ஆதலால் நமது முஸ்லீம் சகோதரர்களே! கிறிஸ்துவ சகோதரர்களே! பார்ப்பனரல்லாத இந்து சகோதரர்களே! இம் மாய்கையில் சிக்கிக்கொள்ளாமல் உஷாராயிருக்க வேண்டும். இந்து மகா சபையை எப்படித் தமிழ் நாட்டிற்குள் நுழைய விடாமல் மண்டையிலடித்து ஒழித்தோமோ, அது போலவே இத்தேசிய ஐக்கியச் சங்கம் என்னும் பார்ப்பன அயோக்கியச் சங்கத்தைத் தமிழ் நாட்டிற்குள் நுழைய விடாமல் வாசற்படியிலேயே அடித்துக் கொல்ல வேண்டும்.

இது சமயம் தமிழ் மக்களின் தலையெழுத்து எவ்வளவு மானக் கேடானதாகவும் இழிவானதாகவும் இருக்கிறது என்பதை சற்று நிதானமாய்க் கவனித்துப் பாருங்கள். கோடிக்கணக்கான தமிழ் மக்களுக்கு தலைவர்கள் என்று சொல்லிக் கொள்ளுபவர்கள் யார்? ஸ்ரீமான்களான எஸ். சத்தியமூர்த்தி அய்யர், எ. ரங்கசாமி அய்யங்கார், எம். கே. ஆச்சாரியார், எஸ். சீனிவாசய்யங்கார், வி. எஸ். சினிவாச சாஸ்திரிகள் முதலிய பார்ப்பனர்களே.

இவர்களுக்கும் நமக்கும் என்ன சம்பந்தம்? இவர்கள் பிறப்பு என்ன? இவர்கள் ஒழுக்கம் என்ன? இவர்கள் வளர்ப்பு என்ன? இவர்கள் ஜீவனம் என்ன? எந்த வகையில் இப்பொழுது மனிதர்களாய் வாழ்கிறார்கள்? என்ன எண்ணத்தின் மேல் நமக்கு இவர்கள் தலைவர்கள் என்று சொல்லிக் கொள்ளுகிறார்கள்? நமக்குத் தலைவர்களாய் இருக்க இவர்களுக்கு என்ன பாத்தியதையும் யோக்

கியதையும் இருக்கிறது? பிச்சைக்கு வந்தவன் பெண்டுக்கு மாப்பிள்ளையானது போல நமது நாட்டைக் காட்டிக் கொடுத்ததல்லாமல், அரசையும் போக போக்கியத்தையும் பாழாக்கியதல்லாமல், நமது சுயமரியாதையை அடியோடு தொலைத்ததல்லாமல், நமக்குள் ஒற்றுமைக்கே மார்க்கமில்லாமல் செய்த தோடல்லாமல், நம்மைத் தாழ்ந்தவர்கள், தெருவில் நடக்கக் கூடாதவர்கள், கண்ணில் பார்க்கக் கூடாதவர்கள், கூடப் பேசக்கூடாதவர்கள், சுவாமியினிடம் போகக் கூடாதவர்கள், கோயிலுக்குள் நுழையக் கூடாதவர்கள், தீண்டப்படாதவர்கள், தாசி மக்கள், வேசி மக்கள், தங்கள் வைப்பாட்டி மக்கள், சண்டாளர்கள் என இப்படிப் பல மாதிரியாக ஆக்கி வைத்துக்கொண்ட தோடல்லாமல் இன்னமும் நம்மைக் கெடுத்து நமது இரத்தத்தை உறிஞ்சிக் கொண்டிருக்கும் இந்தக் கூட்டம் கொஞ்சமேனும் அச்சமும் நாணமும் இல்லாமல் இனியும் நமக்குத் தலைவர்கள் என்று சொல்லிக்கொள்ளவும் நாம் இவற்றைப் பொறுத்துக் கொள்ளவும் இருப்பதென்றால், நமக்கு அறிவு உணர்ச்சி ஆண்மை ரத்தம் இருக்கிறதா என்றுதான் கேட்கிறோம். ஆதலால் இந்து முஸ்லீம் கிறிஸ்துவ சகோதரர்களே! பார்ப்பனப்பூண்டு கலந்த எந்தச் சங்கமானாலும் எந்த ஸ்தாபனமானாலும் அதைத் திரும்பிக் கூடப் பார்க்காதீர்கள்! மோக்ஷமானாலுஞ் சரி நரகமானாலும் சரி, உங்கள் காலைக்கொண்டு நீங்கள் நில்லுங்கள். உங்களிடம் பார்ப்பனர்கள் உங்களை தங்களோடு சேரும்படிக்கோ அல்லது தங்களைச் உங்களுடன் சேர்த்துக் கொள்ளும்படிக்கோ வந்து கேட்பார்களேயானால், முதலாவதாக இந்து மகாசபையையும் வர்ணாசிரம சபையையும் ஒழித்துக் கதவடைத்துவிட்டு வாச் சொல்லுங்கள்! தாங்கள் கடவுளின் முகத்திலிருந்து பிறந்தவர்கள், உயர்ந்தவர்கள் என்றும், நாம் அவர்கள் வைப்பாட்டி மக்கள், தாழ்ந்தவர்கள், அடிமைகள் என்று சொல்லும் சாஸ்திரங்களையும் ஆதாரங்களையும் நெருப்பில் போட்டுப் பொசுக்கி 'சாம்பலாக்கி' விட்டு வாச் சொல்லுங்கள்! அதை யாராவது இனிமேல் வைத்திருந்தால் அவர்களைக் கழுவிலேற்றுவது என்றும் தூக்கில் போடுவது என்றும் சட்டம் செய்து கொண்டு வரும்படி சொல்லுங்கள்! ஒரு காலத்தில் அவர்கள் நம்மை இப்படிச் செய்து தான், அதாவது நம்முடைய பழைய ஆதாரங்களையும் நமது பெருமைகளையும் கூறும் நூல்களைப் பொசுக்கி அவர்களுக்கு சாதமாக பலவித சட்டங்களைச் செய்து நம்மை இவ்விழிந்த நிலைக்குக் கொண்டு வந்துவிட்டு, தாங்கள் உயர்ந்தவர்கள் என்று சொல்லும்படி செய்து கொண்டார்கள். நாம் அப்படிச் செய்யவில்லை. ஆனால் நாம் கேட்பது என்ன? சமத்துவமாக இருக்கச் சொல்லுகிறோம், 'நீயும் சரி நானும் சரி, இருவருக்கும் சம உரிமை உண்டு' என்றுதான் சொல்லும்படி கேட்கிறோம். இந்து முஸ்லீம் கிறிஸ்துவ சகோதரர்களே! நல்ல சமயத்தைக் கைவிட்டு விடாதீர்கள்! பார்ப்பனரின் பசப்பு வார்த்தையில் ஏமாந்து விடாதீர்கள்! உங்கள் சுய மரியாதையைக் காப்பாற்றிக்கொள்ள இத்தருணம் தப்பினால் இனி எத்தருணமும் வாய்க்காது!

இதுதான் சமயம்! மகாத்மா காந்தியை நினையுங்கள்! மறுபடியும் அவரை உங்களது தலைவராயிருந்து இழி தன்மையையும் தாழ்மை நிலைமையையும் அடிமைத் தனத்தையும் போக்கிச் சுய மரியாதையையும் சமத்துவத்தையும் விடுதலையையும் சம்பாதித்துக் கொடுக்கச் சொல்லுங்கள்! இவைகளுக்காக உங்களது உடல் பொருள் ஆவி மூன்றையும் தத்தம் செய்யத் தயாராயிருக்கிறோம் என்று உங்கள் சுத்தமான இரத்தத்தினால் பேனாவைத் தோய்த்து உறுதிமொழிக் கையெழுதிட்ட விண்ணப்பம் அனுப்புங்கள்! வருவார்! வருவார்!! வருவார்!!! வந்து வினை தீர்ப்பார்!!!!.

# தேவஸ்தானச் சட்டம்.

—:o:—

பார்ப்பனர் குட்டு வெளியாய் விட்டது.

## அதிகார துஷ்பிரயோகம் செய்வது நாமா? பார்ப்பனர்களா?

### டாக்டர் வரதராஜுலு நாயுடுகாரும் ஆர். கே ஷண்முகம் செட்டியாரும் தங்கள் வாக்கை நிறைவேற்றுவார்களா?

சென்னை இந்து பரிபாலன மசோதாவானது தற்காலம் நமது நாட்டில் அரசியல் விஷயமாகவோ பொது நன்மை தீமை என்கிற விஷயமாகவோ கருதப்படாமல் பார்ப்பனர் பார்ப்பனரல்லாதார் என்கிற விஷயமாய்க் கருதப்பட்டு வருகிறது என்பது எல்லோரும் அறிந்த விஷயம். அல்லாமலும் அம்மசோதாவைப் பற்றிக் கண்டபடி தூற்றிவரும் பார்ப்பனர்களும் அவர்களது பத்திரிகைகளும் நாளது வரையில் அதிலுள்ள ஒரு சிறு கெடுதியையாவது பொது ஜனங்களுக்கு எடுத்துக் காட்டியவர்கள் அல்ல. சுயராஜ்யம் என்றும் சர்க்காருடன் போராடுவதென்றும் பொய்யும் புளுகும் சொல்லி கேப்பமாரித்தனம் செய்து அரசியல் விஷயத்தில் ஆதிக்கம் பெற்று எப்படி தங்களுக்கும் தங்கள் இனத்தாருக்கும் உத்தியோகமும் ஆதிக்கமும் சம்பாதித்துக் கொள்ளுகிறார்களோ அது போலவே இந்த மசோதா விஷயத்திலும் வேண்டுமென்றே மனப்பூர்த்தியாய் 'மதம் போச்சு', 'தெய்வம் போச்சு', 'இந்துமதத்தில் அரசாங்கத்தார் புகுந்து விட்டார்கள்', 'அநியாயமாய்ப் புதுவரி போடப் போகிறார்கள்', 'நமது இந்து மத தர்ம சொத்துக்களை சர்க்காரார் எடுத்துக் கொள்ளப் போகிறார்கள்', 'மகமதியருக்கும் கிறிஸ்துவர்களுக்கும் கொடுக்கப் போகிறார்கள்', 'அவர்களுக்குப் படிப்புச் சொல்லிக் கொடுக்கும் பள்ளிக்கூடத்திற்கும், ரோட்டிற்கும் முனிசிபாலிட்டிக்கும் உபயோகப்படுத்தப் போகிறார்கள்' என்றும் இன்னமும் எத்தனையோ விதமாய் அயோக்கியத்தனமானதும் இழிவானதுமான பல பொய் வார்த்தைகளைச் சொல்லி பாமர ஜனங்களை ஏமாற்றி அம்மசோதாவை ஒழித்துத் தங்கள் பிழைப்புக்கு வழிதேடிக் கொள்ளப் பார்க்கிறார்கள்.

இது விஷயமாய் நாம் ஒரு பந்தயம் கூறுகிறோம். அதாவது இந்து மத சம்பந்தமான இனாம்களைக் குறித்த 1923-ம் வருஷத்திய சென்னப் பட்டணத்து ஆக்டு என்று சொல்லப்படும் பிரஸ்தாப சட்டத்தில் 9-அத்தியாயங்களும் அவைகளில் மொத்தம் 81-பிரிவுகளும் (செக்ஷன்களும்) 3-ஷெட்யூல்களும் இருக்கின்றன. இவைகளில் எந்தப் பிரிவின்படி நமது மதங்களிலோ தர்மங்களிலோ கோயில்களிலோ வரும்படிகளிலோ தர்ம சொத்துக்களிலோ இதுவரையில் இல்லாத மாதிரி சர்க்கார் பிரவேசிக்கிறார்கள் என்றாவது, வேறுமதத்தினர்களின் உபயோகத்திற்கு நமது தர்ம சொத்தைச் செலவழிக்கிறார்கள் என்றாவது, முனிசிபாலிட்டிக்கோ அல்லது சர்க்காருக்கோ இந்த வரும்படியைக் கொடுக்கலாம் என்றாவது, அல்லது எந்தப் பிரிவின்படி புதுவரி ஜனங்களுக்குப் போட இடமிருக்கிறது என்றாவது, மற்றும் இந்து மதத்திற்கோ சமூகத்திற்கோ கோயில், குளம், தெய்வம் முதலியவைகளுக்கோ ஆபத்து வரக்கூடியதாய் இருக்கிறது என்றாவது எவரேனும் காட்டுவார்களேயானால், இந்தப் பார்ப்பனர்களை நாம் நமது தலைவர்கள் என்றும், இந்த மசோதாவை ஒழிப்பதற்கு நாமும் சேர்ந்து பாடுபடத் தயாராயிருக்கிறோம் என்றும் உறுதி கூறுகிறோம். இல்லாதவரை இந்தப் பார்ப்பனர்கள் இனிமேல் நமக்காவது நமது நாட்டுக்காவது தலைவர்கள் என்று சொல்லிக்கொள்ளும் அல்பத்தனத்தை விட்டுவிடுகிறார்களா என்று கேட்கிறோம்.

தவிரவும் ராஜீய விஷயத்தில் தேவஸ்தான மசோதாவைப் பற்றியும் வகுப்பு வாரிப் பிரதிநிதித்துவ விஷயத்தைப் பற்றியும் பேசக்கூடாது என்று இதுவரை சொல்லி வந்துவிட்டு சந்தர்ப்பம் வந்த உடன் தேவஸ்தான விஷயத்தை ராஜீயத் திட்டத்தில் சேர்த்துக்கொண்டு சுயராஜ்யக் கட்சியாருக்கு சட்டசபைக்குப் போய் தேவஸ்தான மசோதாவை எதிர்க்கவேண்டும் என்று ஸ்ரீமான் ரெங்கசாமி அய்யங்கார் சுற்று உத்திரவு அனுப்பக் காரணம் என்ன?

சுயராஜ்யக் கட்சி என்றால் பார்ப்பனர் கட்சி, பார்ப்பனர் கட்சி என்று இதுவரை சாற்றிவந்தோம். இதை சில நண்பர்கள் விரும்பவில்லை என்பதாகக் காட்டி வந்தார்கள். இப்போது சுயராஜ்யக் கட்சி பார்ப்பனர் கட்சிக் கூட அல்ல. ஆனால் சுயராஜ்யக் கட்சி பார்ப்பனரின் முலாம் கட்சி என்றே சொல்லுவோம்.

தேவஸ்தான மசோதா வரப்போகும் சென்னை சட்ட சபைக் கூட்டத்திற்கு வரப் போவதாய் சுமார் ஒரு மதத்திற்கு முன்பிருந்தே சுயராஜ்யக் கட்சிக்கு நன்றாய்த் தெரியும். அப்படி இருக்க அதை எதிர்ப்பதற்காக சட்ட சபைக்கு சுயராஜ்யக் கட்சியார் போவதா இல்லையா என்பதாக ஸ்பெஷல் கமிட்டியை கேட்க காங்கிரஸ் காரியதரிசியாகிய ஸ்ரீமான் எ. ரெங்கசாமி அய்யங்காருக்குப் போதுமான சாவகாசமிருந்தது; இன்னமும் இருக்கிறது. இப்படியிருக்க தங்கள் கட்சியைச் சேர்ந்த இரண்டொரு அடிமைகளிடமிருந்து கடிதம் வந்ததாகப் பெயர் வைத்துக்கொண்டு-அதுவும் மடாதிபதிகளிடம் பொறுக்கித் தின்பவர்களிடமிருந்து கடிதம் வந்ததாகப் பெயர் வைத்துக் கொண்டு-அதன் பேரில் காங்கிரஸ் காரியதரிசியாயிருக்கும் ஒரு பார்ப்பனரான ஸ்ரீமான் எ. ரெங்

சாமி அய்யங்கார், சுயராஜ்யக் கட்சி "ஆக்டிங் தலைவராயிருக்கும்" மற்றொரு பார்ப்பனரான ஸ்ரீமான் எஸ். சீனிவாசய்யங்காரிடம் யோசனை செய்ததாகவும், தேவஸ்தான மசோதா 69-வது பிரிவுப்படி ஜனங்களுக்கு அதிக வரி போட இடந்தருவதாகவும், ஆதலால் சுயராஜ்யக் கட்சியார் போய் இதைத் தடுக்க வேண்டியதென்றும், இது முக்கியமான விஷயமானதால் இதற்காக நியமித்த ஸ்பெஷல் கமிட்டியை அனுமதி கேட்க வேண்டியதுகூட அவசியமில்லை என்றும், இவர்கள் தீர்மானித்து விட்டு தாங்களே உத்திரவு கொடுத்திருப்பதாயும் சுயராஜ்யக் கட்சி சட்ட சபை மெம்பர்களுக்கு ஒரு சுற்று உத்திரவு அனுப்பப்பட்டிருக்கிறது. இதிலிருந்து காங்கிரஸ் பார்ப்பனர்களுடையது என்றும், பார்ப்பன ராஜ்யத்திற்குத் தான் காங்கிரஸ் உபயோகப்பட்டு வருகிறதென்றும், பார்ப்பனர்கள் தங்களுக்குக் கிடைத்த அதிகாரத்தைப் பார்ப்பனரல்லாதாருக்கு விரோதமாய் துஷ்ப் பிரயோகம் செய்கிறார்கள் என்றும், காங்கிரஸ் பொது காங்கிரஸ் என்று சொல்லிப் பாமரர்களை ஏமாற்றவே அதில் சில பார்ப்பனரல்லாதார் பெயர்களையும் சேர்த்துக்கொள்ளப் பட்டிருக்கிறது என்றும், சில பார்ப்பனரல்லாத கனவான்களும் இந்த அக்கிரமங்களை அறிந்தே தங்களுடைய பெயரையும் இந்தப் பார்ப்பனர்கள் உபயோகப்படுத்திக் கொள்ள சம்மதித்திருக்கிறார்கள் என்றும் எழுதியும் சத்தம் போட்டும் வந்தோம். அது இப்போது வெளிப்படையாய் ருஜுவாகிவிட்டதென்றே சொல்லுவோம்.

பார்ப்பனர்களின் இந்தப் புரட்டுகளை எதிர் பார்த்தே சென்னையில் ஸ்ரீமான்கள் டாக்டர் வரதராஜுலு நாயுடு அவர்களையும் ஆர். கே. ஷண்முகம் செட்டியார் அவர்களையும் நாம் சந்தித்த காலத்தில் தேவஸ்தான மசோதாவைப் பற்றி நமது பார்ப்பனர்கள் இதே மாதிரி செய்வார்களே, அப்போது தாங்கள் என்ன செய்வீர்கள் என்று கேட்டோம். அது சமயம் டாக்டர் நாயுடுகார் அவர்கள் சொன்னதாவது:—

எந்தெந்த விஷயங்களில் சுயராஜ்யக் கட்சியார் சட்டசபைக்குப் போகலாம் என்கிற விஷயத்தை நிர்ணயிக்கவும், சுயராஜ்யக்கட்சிக்கு, சட்ட சபைக்குப் போக, அனுமதி கொடுக்கவும் ஏற்பட்ட தனிக் கமிட்டியில் தானும் ஒரு அங்கத்தினரானதால், தான் இதற்கு உத்திரவு கொடுக்கமாட்டேன் என்றும் அப்படி மீறி அவர்கள் போனால் அந்தக் கமிட்டியிலிருந்து தான் விலகுவதோடு மட்டும் நில்லாமல் அதற்குமேல் என்ன செய்வது என்பது தனக்குத் தெரியுமென்றும் சொன்னார்.

ஸ்ரீமான் ஆர். கே. ஷண்முகம் செட்டியார் அவர்கள் சொன்னதாவது:- தேவஸ்தான மசோதா விஷயம் சுயராஜ்யக் கட்சித்திட்டத்தில் ஒன்றாக இப்பார்ப்பனர்கள் கருதி ஏதாவது செய்வார்களேயானால் தான் சுயராஜ்யக் கட்சியில் இருந்து விலகிவிடுவதாய்ச் சொன்னார்.

இவ்விரண்டு கனவான்களும் தங்கள் வாக்கை நிறைவேற்ற வேண்டிய காலம் வந்துவிட்டது. என்ன செய்யப் போகிறார்கள் என்பதை தமிழ் மக்கள் ஆவலாய் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள் என்பது தப்பாகாது.

# இதுவும் ஒரு நன்மைக்கே

—o—

## காங்கிரஸ் தலைவர் பதவி.

அஸ்ஸாம் காங்கிரஸ் தலைவர் பதவிக்கு இவ்வருஷம் ஒரு மகமதிய கனவானையே தெரிந்தெடுக்க வேண்டுமென்பது தற்காலம் தேசத்திலுள்ள எல்லா தேசிய சபைகளினுடையவும் தேசிய வாதிகளினுடையவும் ஒரே கருத்தாயிருந்து வருகிறது. ஏனெனில் வட நாட்டில் உள்ள இந்து முஸ்லீம் கலவரங்களுக்கும் தென் நாட்டில் உள்ள பார்ப்பனர் பார்ப்பனரல்லாதார் கலவரத்திற்கும் தக்க உபாயம் சொல்லக் கூடியவர்களும் பொது ஜன நம்பிக்கைக்குப் பாத்திரமான வகுப்பார்களுமே இருந்தால்தான் அந்தக் காங்கிரஸையும் அதன் உபதேசத்தையும் பொது ஜனங்கள் மதிக்கக் கூடும். அப்படிக்கில்லாமல் யாரும் பின் பற்றுவோரில்லாத ஒரு தனிப்பட்ட நபர், அதுவும் தேசத்தாரின் அவநம்பிக்கைக்கும் வெறுப்புக்கும் துவேஷத்திற்கும் ஆளான வகுப்பைச் சேர்ந்தவரும் சுய நன்மையையும் கீர்த்தியையுமே பிரதானமாய்க் கருதியவரும் ராஜிய வாழ்வில் நாணயத்தைக் காப்பாற்றிக் கொள்ள முடியாதவருமாய் இருக்கும் ஒருவர் போட்டி போட ஆரம்பித்தால் யோக்கியர்கள் கட்டாயம் விலகியே விடுவார்கள். அது மாத்திரமல்லாமல் காங்கிரஸ் தலைவர் தேர்தலில் தான் வெற்றி பெற சூழ்ச்சிகளும் ஒழுக்கீனமான பிரசாரங்களும் நடந்து வருமேயானால் கண்டிப்பாய் பொறுப்பும் யோக்கியதையும் உள்ளவர்கள் அந்த ஸ்தானத்தை விரும்பவேமாட்டார்கள்.

சென்னைப் பார்ப்பனர்கள் தேர்தல்களில் செய்யும் சூழ்ச்சியை உலகம் அறியாததல்ல. உதாரணமாக, திருப்பூர் மாகாணக் கான்பரன்சுக்கு டாக்டர் வரதராஜுலு நாயுடுகாரை தெரிந்தெடுக்காமல் இருப்பதற்கு பார்ப்பனர்கள் செய்த சூழ்ச்சியும், காஞ்சீபுரம் மகாநாட்டுக்கு ஸ்ரீமான் திரு. வி. கலியாணசுந்தர முதலியாரைத் தேர்ந்தெடுக்காமல் செய்து ஸ்ரீமான் எ. ரெங்கசாமி அய்யங்கார் தலைவராவதற்குப் பார்ப்பனர்கள் செய்த சூழ்ச்சியும் புரட்டும் பொய்யும் எவ்வளவு என்பதும் தமிழ் நாடு வாசிகள் நன்றாய் அறிந்திருக்கிறார்கள்.

நிற்க இரண்டு பொறுப்புள்ள மகமதிய கனவான்கள் இந்த ஸ்தானத்தின் அபேக்ஷக ஸ்தானத்தில் இருந்து விலகக் காரணம் என்ன! ஒருவர் தன்னை விடப் பெரியார் இந்த ஸ்தானத்தை வகிக்க வேண்டும் என்கிறார்; மற்றொருவர் போட்டியில்லாமலிருந்தால்தான் சம்மதிப்பேன் என்கிறார். இந்த இரண்டு கனவான்களுக்கும் பதில் சொல்லாமல் ஸ்ரீமான் எஸ். சீனிவாசய்யங்கார் வாயை மூடிக்கொண்டு தனக்காக பிரசாரம் செய்கிறார். இதன் கருத்தென்ன? ஸ்ரீமான் டாக்டர் அன்சாரியை விட இவர் பெரியவர் என்பதா? அல்லது ஸ்ரீமான் மஷருல் ஹக் அவர்களைவிட தான் போட்டிக்கு பயப்படவில்லை என்பதா? உண்மையாய் தேசாபிமானமும் மனுஷத்தன்மையும் சுய நலமின்மையும் ஒருவருக்கு இருந்திருந்தால் இம்மாதிரி பெருந்தன்மையாய்ப் பேசிய மகமதிய கனவான்கள் இருவரில் ஒருவருக்குச் சமாதானம் சொல்லி யாரையாவது ஒருவரைத் தலைவராக்க வேண்டியது அவர் கடமையாகும். அப்படிக்கில்லாமல் "மச்சான் இறந்தால் நல்லதாச்சு, அவருடைய கம்பளி நமக்காச்சு" என்கிற பழமொழிப்படி யார் விலகிக் கொண்டாலும் நமக்கு அக்கரையில்லை; தேசத்தார் அபிப்பிராயத்தைப் பற்றியும் நமக்குக் கவலையில்லை; எப்படியாவது நமக்கு அந்தப் பதவி கிடைத்தால் போதும் என்று சொல்லுவது எவ்வளவு மனுஷத் தன்மை அற்ற காரியம் என்பது வாசகர்கள்தான் உணர வேண்டும்.

காங்கிரசுக்கு ஏதாவது நல்ல காலம் வருவதாயிருந்தாலல்லவா நல்ல புத்தி தோன்றும்! அதற்கு அந்திய காலம் வரப்போவதால், அது யாருடைய கைக்குப் போனால் முடிவு பெறுமோ அவர்கள் கைக்கு போனால் தானே அது ஒழிய அனுகூலமாயிருக்கும். இதுவும் ஒரு நன்மைக்கே!

# நமது 'நவீன' சந்தாதாரர்கள்.

பல அன்பர்கள் தங்களை சந்தாதாரராய்ச் சேர்த்துக் கொண்டு சந்தா தொகைக்கு வி. பி. பி. யில் அனுப்புமாறு கடிதம் எழுதுகின்றனர். அவர்களது விருப்பப்படி "குடி அரசை" வி. பி. பி. யில் அனுப்பினால் அதனை ஏற்றுக் கொள்ளாது திருப்பி அனுப்பி விடுகின்றனர். இத்தகைய அன்பர்களின் செய்கைக்கு நாம் பெரிதும் இரங்குகிறோம்.

இவ்வாறு அனுப்பச் சொல்லி திருப்பி அனுப்புவதால் இவர்களுக்குக்கு என்ன இலாபமோ தெரியவில்லை. நமக்கு இரண்டரை அணா நஷ்டத்தை உண்டு பண்ணி, அதை அவர்களும் அடைதற்கில்லாமல் இருவருக்கும் மத்தியிலிருக்கும் சர்க்காரின் இலாபம் அடையும்படி செய்வது எதற்கோ?

இத்தகைய சந்தாதாரர்களின் பெயரை நமது "குடி அரசி"ல் வெளியிட முற்பட்டோம். ஆனால் இதை எச்சரிக்கை முறையாகக் கருதி இம்முறை அவற்றை வெளியிடாது விட்டுவைத்துள்ளோம். இனி அவ்வாறு "குடி அரசை" வி. பி. பி. யில் அனுப்புமாறு எழுதி, வி. பி. பி. அனுப்பப் பெற்றபின் அவற்றைத் திருப்பி அனுப்பும் நமது அன்பர்களின் பெயரையும் அவர்தம் விலாசத்தினையும் பத்திரிகையில் வெளியிட்டுவரக் கருதியுள்ளோம்.

இது வரை அவ்வாறு வி. பி. பி. திருப்பி அனுப்பியவர்கள் மதுரை ஜில்லாவிலேயே மிகுதியாக இருக்கின்றனர். இத்தகைய சந்தாதாரர்கள் சேருவதினும் சேராதிருப்பதே நன்று.

## முளையிலேயே குறும்புத்தனம்.

—o—

"சென்ற ஞாயிற்றுக் கிழமை மாலை 4 மணிக்கு சென்னை பார்ப்பனரல்லாத மாணவர், தங்கள் சொந்த பணத்தைக்கொண்டு ராவ் பகதூர் வி. ரெங்கநாதன் செட்டியார் கட்டிய வெங்கடேஸ்வர ஹாஸ்டலில், சென்ற கார்ப்பரேஷன் தேர்தல்களில் வெற்றிபெற்ற நமது டாக்டர் சி. நடேச முதலியார், திரு. பி. டி. குமாரசாமி செட்டியார், பி. ரெங்கநாதஞ் செட்டியார் முதலியவர்களுக்கும் பனகால் ராஜா, மதனகோபால் நாயுடு, ஆரியா முதலியவர்களுக்கும், சென்ற தேர்தல்களில் நமது ஜஸ்டிஸ் கட்சி வெற்றி பெற்றதற்காக சிற்றுண்டி வழங்கினர். 90-பேர் இருக்கும் ஹாஸ்டலில் 25-பேர் தான் நம்மவர். அந்தோ! பார்ப்பனரல்லாதாரின் தருமம் இப்படியும் வீணாக வேண்டுமா? அப்படியிருந்தும், அன்று பார்ப்பனப்பிள்ளைகள் நமது தலைவர்களை அவமானப் படுத்த எண்ணங்கொண்டு, வார்டனிடமும், செட்டியாரிடமும் சென்று இந்த கொண்டாட்டத்தை தடைசெய்யச் சொன்னார்கள். அவர்கள் மறுத்துவிடவே, ஹாஸ்டலை விட்டு எல்லாப் பார்ப்பன மாணவர்களும் தலைவர்கள் வரும் சமயத்தில் வெளியேறினர். ஆனால் மாலை 8-மணிக்குத் திரும்பி வந்து விட்டனர்". என்று ஒரு நிருபர் எழுதியுள்ளார்.

சென்னையில் பார்ப்பனரல்லாத தலைவர்கள் நகரக் கார்ப்பரேஷன் தேர்தலில் பார்ப்பனரின் பலமான சூழ்ச்சிக்கிடையில் தேர்ந்தெடுக்கப்பட்ட வெற்றியானது சென்னையில் உள்ள பார்ப்பனரல்லாத மாணவர்களுக் கெல்லாம் பெரிய உணர்ச்சியையும் மகிழ்ச்சியையும் உண்டாக்கி விட்டது. அதன் பலனாக சென்னையில் பார்ப்பனரல்லாத ஒரு தர்மப் பிரபுவான ராவ் பகதூர் வி. ரெங்கநாதம் செட்டியார் அவர்களால் கட்டப்பட்ட வெங்கிடேஸ்வரா ஹாஸ்டல் என்ற ஒரு விடுதியில் வசிக்கும் பார்ப்பனரல்லாத மாணவர்களுக்கும் மகிழ்ச்சி யேற்பட்டு, வெற்றி பெற்ற தலைவர்களுக்குத் தங்கள் மகிழ்ச்சியையும்மரியாதையையும்காட்டிக்கொள்வதற்காக, வெற்றி பெற்ற கனவான்களையும் மற்றும் உள்ள சில தலைவர்களையும் தங்கள் விடுதிக்கு விஜயம் செய்து தங்கள் மரியாதையைப் பெற்று ஆசீர்வதித்துப் போகும்படி வேண்டிக் கொண்டார்கள். பார்ப்பனரல்லாதாரால் கட்டப்பட்ட அந்த விடுதியில் 90-பிள்ளைகள் வசித்தாலும் அதில் 65-பிள்ளைகள் பார்ப்பனப் பிள்ளைகளாயும் 25-பிள்ளைகள்மட்டும் பார்ப்பனரல்லாத பிள்ளைகளாயிருந்தும் மேற்படி 54-பார்ப்பனப் பிள்ளைகளும, பார்ப்பனரல்லாதாரின் தர்மத்தால் தானே இந்த விடுதியில் நாம் வசிக்கிறோம் என்கிற நன்றி அறிதல் இல்லாமல், இம்மாதிரி பார்ப்பனரல்லாத தலைவர்களுக்குக்காட்டும் மரியாதையை 'நாங்கள் சகிக்க மாட்டோம்; அவற்றை நடக்கவும் விடமாட்டோம்' என்று பல சூழ்ச்சிகள்செய்து, அவற்றில் வெற்றி பெறாமல் போனதினால் தலைவர்கள் வரும் சமயம் பார்த்து வெளியேறினார்களாம். இந்தப் பார்ப்பன மாணவர்கள் உண்மையிலேயே யோக்கியமும் நன்றியறிதலும் சம உணர்ச்சியும் போர் வீரத் தத்துவமும் உடையவர்களானால் இவர்கள் என்ன செய்திருக்கவேண்டும்? தாங்களும் இந்த மகிழ்ச்சியில் கலந்து தங்களுக்குப் பார்ப்பனர் பார்ப்பனரல்லாதார் என்கிற வித்தியாசமும் துவேஷமும் இல்லை என்று காட்டிக் கொண்டிருக்க வேண்டும்; அப்படிக்கில்லாவிட்டால் மனிதத் தன்மையை உத்தேசித்தாவது சும்மா இருந்திருக்கவேண்டும். அப்படிக் கில்லாமல் தானம் கொடுத்த மாட்டைப் பல்லைப் பிடித்து பார்ப்பதுபோல் தாங்கள் வெளியேறினது எவ்வளவு அல்ப புத்தியையும் நன்றி கெட்ட தன்மையையும் காட்டுகிறது. நம் நாட்டுப் பார்ப்பனர்களும் அவர்களது பத்திரிகைகளும் தங்களுக்குக் கொஞ்சம்கூட பார்ப்பனரல்லாதார்மீது துவேஷ புத்தி இல்லையென்றும் பார்ப்பனரல்லாதார் தான் இவற்றைக் கிளப்பிவிட்டுக் கொண்டு வருகிறார்கள் என்றும் தினமும் பிதற்றி வருகிறதை நாம் பார்க்கிறோம். ஆனால் இப்போது இந்த சம்பவத்தைக் கொண்டே பார்ப்பனர் பார்ப்பனரல்லாதார் துவேஷம், பொறாமை, வயிற்றெரிச்சல், குடி கெடுக்கும் தன்மை, நன்றி கெட்ட தனம் ஆகியவைகள் பார்ப்பன மூளைகளிலிருந்தே இருந்து வருகிறதா? பார்ப்பனரல்லாதாரிடம் இருக்கிறதா? என்று கேட்கிறோம். அவர்கள் இவ்வளவு தூரம் தங்களின் துவேஷத்தைத் தைரியமாய் வெளிக்காட்டிய பிறகும், நாம் இனியும் சும்மாயிருப்பது சுத்தப் பயித்தியக்காரத் தனமென்றே சொல்லுவோம். ஒவ்வொரு ஊரிலும் ஒவ்வொரு பள்ளிக்கூடங்களிலும் 'அறிவிரி,' அதாவது பாலர் வகுப்பிலிருந்தே பிள்ளைகளுக்குப் பார்ப்பனர்களின் அட்டூழியத்தையும் கொடுமையையும் அவர்களால் நாம் அடைந்த கதியையும் பாடப்புத்தகமாய் வைத்து சொல்லிக்கொடுக்கும்படியும் சென்னையில் மற்ற பொது மாணவர்கள் ஆரம்பித்தது போல ஒவ்வொரு பள்ளிக்கூடத்திற்கும் பார்ப்பனரல்லாத பிள்ளைகள் சங்கம் என்பதாக ஒரு சங்கம் ஸ்தாபித்து அதில் தங்கள் வகுப்பார் முன்னேற்றத்திற்கு வேண்டிய கவலை செலுத்தி வரும்படி செய்ய வேண்டியது இது சமயம் மிகவும் அவசியமாயிருக்கிறது. மாணவர்கள் இதுசமயம் அரசியலில்பிரவேசிக்காமலிருக்க வேண்டும் என்பதை நாமும் ஒப்புக் கொள்ளுகிறோம். ஆனால் அவர்கள் தங்கள் சமூக விஷயங்களிலும் சுயமரியாதை விஷயங்களிலும் முன்னேறவேண்டியது அடிமைக் கல்வியை விட முக்கியமான தென்றே சொல்லுவோம். ஆதலால் சென்னை மாணவர்களைப் பின்பற்றி மற்றும் வெளி யிடங்களிலுள்ள மாணவர்களும் நடந்து கொள்வார்கள் என்று எதிர்பார்ப்பதோடு சென்னை மாணவர்களை மிகுதியும் போற்றுகிறோம்.

## பிராமணீயத்தை ஒழிந்தவர்கள்

பார்ப்பனரல்லாதார் வைதீகச் சடங்குகள் என்று பெயர் வைத்துக் கொண்டு தங்கள் குடும்பங்களில் நடக்கும் சுபாசுப காரியங்களுக்கு திதி, திவசம் என்றோ சிரார்த்தம் என்றோ, தங்கள் முன்னோர்களின் ஞாபகார்த்தமாகச் செய்யும் காரியத்தை, முன்னோர்களை மோட்சத்திற்கு அனுப்பச் செய்யப்படும் கிரிகை என்ற மூட நம்பிக்கையால், அக்காரியத்திற்கு "பிராமணர்"களை அழைத்து அதை அவர்களைக் கொண்டே செய்யவேண்டுமென, உடம்போடொட்டிய அழுக்குபோல் தங்கள் மனத்தில் படியப் பெற்று,— ஒரு பார்ப்பனனைக் கூட்டி வந்து பலவகைத்தான சன்மானங்களை அப்பார்ப்பனனுக்கு அளித்து, அவன் சொல்லும் பிரகாரமெல்லாம் சொல்லி, அவன் காலில் விழுந்து விழுந்து சாஷ்டாங்க நமஸ்காரம் செய்து வருவதும், அதே போன்று கலியாணம் முதலிய சுபகாரியங்களுக்கும் பார்ப்பனனை அழைத்து, மண மக்களுக்கு ஆயுள் விருத்தியையும் புத்திரசம்பத்தையும் அப்பார்ப்பனன் இரக்ஷாபந்தனமளித்துத் வருவதாகப் பிரேமைக்குள்ளாகி பார்ப்பனனைக்கொண்டு செய்துவருவதும்-வீண் அருத்தமற்ற - பொருளற்ற - சுயமரியாதையை இழக்கச் செய்யத்தக்க-ஒரு கூட்டார் தங்கள் பிழைப்பைக் கருதி செய்து வைத்து ஏமாற்றிவரும் காரியமாகும்.

இவ்வுண்மையைத் தெரிந்த பலர் சின்னாட்களாக அவ்வித மூட நம்பிக்கைக்குள்ளாகாமல் விழித்துக்கொண்டனர்-விழித்து வருகின்றனர். இவ்வாறு தங்கள் சுபா சுப காரியங்களுக்குள் பிராமணியம் வந்து நுழையாமல் விரட்டியவர்களுள் **14** கனவான்களின் பெயரை சென்ற இதழில் இதே தலையங்கத்தின் கீழ் வெளியிட்டிருந்தோம். இவ் விதழிலும் பிராணீயத்தை ஒழித்தவர்களுள் சில கனவான்களின் பெயரைக் கீழே வெளியிட்டுள்ளோம். இனியும் அவ்வாறு சடங்குகள் செய்வதில் நம்பிக்கையில்லாதவர்கள் பெயரைத் தெரியப்படுத்தினால் வாரந்தோறும் பத்திரிகையில் பிரசுரித்து வரப்பெறும்.

மேற்கூறிய பிரகாரம் பிராமணீயத்தை விரட்டிய மற்ற கனவான்களின் பெயர்களாவன.—

15. எஸ். எ. கே. கலியப்பெருமாள் நாயுடு,
ஆஞ்சிநேய வார்ப்படத் தொழிற்சாலை,
திருச்சி.
16. ச. ப. சி. பரமசிவன் செட்டியார்,
கதர் டெப்போ, திருச்சி.
17. அ. சிவப்பிரகாசம் பிள்ளை,
தலைமைத் தமிழாசிரியர்,
அர்ச் சூசையப்பர் கலாசாலை, திருச்சி.
18. தி. திரவியம் பிள்ளை, முனிசிபல் கவுன்சிலர், திருச்சி.
19. பி. எ. சுப்பிரமணிய பிள்ளை,
இராகவ செட்டித் தெருவு, திருச்சி.
20. ஈ. என். வெங்கடப்பெருமாள்
நாயுடு, பி. எ.,
பென்ஷன் தாசில்தார், ஈரோடு.
21. கு. வீராசாமி நாயுடு, ஈரோடு.
22. சி. கந்தசாமி,
திருநெல்வேலி கதர் நெசவுச்சாலை,
சாவடியகம், திசையன்விளை.

## சென்னை சட்ட சபை.

—:o:—

1926-ஹு ஜூலை மீ 17-உ சென்னை சட்ட சபையில் ஸ்ரீமான் ஆர். வீரையன் எம். எல். சி. அவர்கள் கேட்ட கேள்விகளும் அதற்கு விடைகளும்:—

1. சென்னை ஜில்லா முனிசிபாலிட்டி சட்டத்தின்படி விதிக்கப்பட்ட சைகிள் வண்டி வரியின் திருத்தமசோதா.

*ஸ்ரீமான் ஆர். வீரையன்:—* கனம் ஸ்தல சுய ஆட்சி மந்திரி அவர்கள் சென்னை ஜில்லா முனிசிபல் ஆக்ட் 4-வது அட்டவணையில் கண்ட அரை வருஷத்திய சைகிள் வண்டி வரியாகிய 2-ரூபாயைக் குறைக்க எதாவது திருத்த மசோதா கொண்டுவர உத்தேசமுண்டாவென்பதை அறிய விரும்புகிறேன்.

*பதில்:—* இல்லை.

*ஆர். வீ:—* சைகிள் விடுபவர்கள் சைகிள் வண்டி வரி குறைக்கப்பட வேண்டுமென்று அரசாங்கத்தாருக்கு மஹஜர்கள் அனுப்பியிருக்கிறார்களா?

*கனம் பனகால் ராஜா:—* இதுவரை அப்படி மஹஜர்கள் அரசாங்கத்தாரால் வரப்பெறவில்லை. அப்படி ஏதேனுமிருப்பின் கனம் மெம்பர் அவர்கள் எழுத்து மூலமாகத் தெரிந்துகொள்ளலாம்.

*ஆர். வீ:—* அரசாங்கத்தாருக்கு, சைகிள் வண்டி வரி அரை வருஷத்திற்கு இரண்டு ரூபாயாயிருப்பது, சரிதானா அல்லவா என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

*கனம் அக்கிராசனர்:—* நியாயமானது தான்.

*ஆர். வீ:—* சைகிள் வண்டியினால் ரோட்டுகளுக்குக் கெடுதி நேரிடுவதில்லையாகையால் அதன் வரியைக் குறைக்கப்பட எதாவது திருத்த மசோதா கொண்டுவரப்படுமோ வெனத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

*கனம் பனகால் ராஜா:—* கனம் மெம்பர் அவர்கள் இது விஷயத்தைப் பற்றித் தெரிந்தெடுக்கப்பட்ட கமிட்டிக்குத் தெரியப்படுத்திக் கொள்ளலாம்.

2. வந்தவாசி உயர்தர கலாசாலையில் தாழ்த்தப்பட்ட வகுப்பு மாணவர்களைக் கொடுமையாய் நடத்துதல்.

*ஆர். வீ:—* வந்தவாசி உயர்தர கலாசாலையில் தாழ்த்தப்பட்ட வகுப்பு மாணவர்களை எல்லோருடன் சமமாக உட்காரவைக்காமல் தனிப் பெஞ்சுகளில் உட்கார வைப்பது உண்மைதானா? அப்படியாயின் காரணம் என்ன?

தேகப்பயிற்சி நேரங்களில் கூட அம்மாணவர்களைத் தனியே ஒதுக்கி வைப்பது உண்மையா? அம்மாணவர்களை சாரணச் சிறுவர் இயக்கத்திலும் கூட தனியாக ஒதுக்கிவைத்துக் கொடுமையாக நடத்துவது உண்மையா?

வந்தவாசி கலாசாலையில் ஒவ்வொரு வகுப்பிற்கும் முறையே எத்தனை ஆதி திராவிட மாணவர்கள் வருகிறார்கள்?

அரசாங்கத்தாருக்கு மேற்சொன்ன விஷயங்களைப்பற்றிய சரியான புள்ளி விபரம் கிடைத்திராவிடில் உடனே தெரிந்து கனம் கல்வி இலாகா மந்திரி தெரிவிப்பாரா?

மேற்கண்ட நான்கு பிரிவுகளிலும் அரசாங்கத்தார் 1926-ஹு ஜனவரி மீ 6-ந் தேதிய 28 செ. (கல்வி) விதிப்படி அநேக நிபந்தனைக் குட்பட்டு தாழ்த்தப்பட்ட மாணவர்களைப் பொது ஜன கலாசாலைகளிலோ அல்லது அரசாங்க கலாசாலைகளிலோ சேர்க்கப் படுவதைக் குறித்து அசக்தர்களாயிருப்பதென்பதைத் தவிர வேறு ஏதேனும் சரியான நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டார்களா?

*கனம் சர். ஏ. பி. பத்ரோ:—* கனம் மெம்பர் அவர்கள் சரியான நடவடிக்கை என்னவென்பதை விளக்க வேண்டும். அரசாங்கத்தாரால் பிரஸ்தாப விஷயத்தில் பொது ஜனங்களுக்குப் போதிய சௌகரிய மேற்படுத்த அசக்தர்களாகயிருப்பதைப் பற்றி உத்திரவு பிறப்பிக்கப் பட்டுள்ளது.

*ஆர். வீ:—* உத்திரவில், கலாசாலைகளில் சேருவதற்கு வகுப்புப் பேதம் சற்றும் கவனிக்கக் கூடாதென்றிருந்தும் சில மாணவர்களிடம் பேதங்காட்டி அவர்களைத் தனியே ஒதுக்கி வைத்திருப்பது குறிப்பிடத் தக்கது.

*கனம் அக்கிராசனர்:—* அரசாங்கத்தார் அதைப்பற்றிய விஷயங்களுக்கு பதில் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

*ஆர். வீ:—* பிறப்பிக்கப் பட்ட சில உத்திரவுகளைத் தவிர அரசாங்கத்தாரால் வேறு சரியான நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்பட்டனவா? அரசாங்கத்தாருக்கு அப்பேர்ப்பட்ட கலாசாலைகளுக்குக் கொடுக்கப்படும் சகாய உதவி (கிராண்டு)ப் பணத்தை நிறுத்திவிட அதிகாரம் உண்டா வென்று எனக்குத் தெரிவிக்கக் கூடுமா?

*கனம் அக்கிராசனர்:—* அக்கேள்வி இப்பொழுது பிறக்க ஞாயமில்லை.

3. சில மாணவிகளுக்கு விதவாசிரமத்தில் இடங்கொடுக்க மறுத்தல்.

*ஆர். வீ:—* ஜூலை மாதத்தில் கலாசாலை திறக்கப்பட்டபோது அரசாங்க விதவாசிரமத்தில், லேடி வெல்லிங்டன் போதனா முறை கலாசாலையிலிருந்து வந்த இரு ஆதி திராவிட விதவை மாணவிகளைச் சேர்த்துக் கொள்ள மறுத்தது உண்மையாவென்றும், ஷை கலாசாலையைச் சேர்ந்த ஹிந்து விடுதியில் அதே கல்லூரியிலிருந்து வந்த ஒரு தீய மாணவியைச் சேர்த்துக்கொள்ள மறுத்தது உண்மையாவென்றும், இவ்விரு மறுத்தல்களும் ஒரு பார்ப்பனப் பெண் ஷை விதவாசிரமத்திற்கு மேலதிகாரியாயிருந்தகாலத்தில் நடந்ததாவென்றும் கனம் கல்வி இலாகா மந்திரி அவர்கள் தெரிவிப்பாரா?

*பதில்:—* ஆதி திராவிட விதவைகளைச் சேர்த்துக் கொள்வதை மறுக்கவில்லை. இவ்விதவை விஷயத்தைப் பற்றிக் கல்வி இலாகா டைரெக்டரால் விசாரணை நடந்து இருக்கின்றது. இச் சம்பவங்கள் அப்பார்ப்பனப் பெண் மேலதிகாரியாயிருக்கும் போது நடந்ததல்ல.

*ஆர். வீ:—* ஆதி திராவிட விதவைகளுக்குப் பிரவேசம் மறுத்தது அப் பார்ப்பனப் பெண் மேலதிகாரியா அல்லது வேறு உத்தியோகஸ்தரா?

*சர். பாத்ரோ:—* அம் மேலதிகாரி பார்ப்பன வகுப்பைச் சேர்ந்தவரே.

*ஆர். வீ:—* அம்மாது காயமான மேலதிகாரியா அல்லது தற்காலிகமான அதிகாரியா வெனத் தெரிய விரும்புகிறேன்.

*சர். பாத்ரோ.—* பிறகு அறிவிக்கப்படும்.

*ஆர்:—* விதவாசிரமத்தில் வேறு ஆதி திராவிட விதவைகளிருக்கிறார்களா?

*சர். பத்ரோ:—* அக் கேள்வி பிறக்கக் காரணமில்லை.

*ஆர். வீ:—* முதல் மறுப்பை யொட்டி இக் கேள்வி கேட்டேன்.

*சர். பாத்ரோ:—* பதில் அளிக்கப் பட்டிருக்கிறது.

*ஆர். வீ:—* பதிலில் ஒருவருக்கும் பிரவேசம் மறுக்கவில்லை யென்று கண்டிருக்கிறது. நான் இதற்கு முன்னரே அரசாங்க விதவாசிரமத்தில் ஆதி திராவிட விதவைகள் இருக்கிறார்களா என்றுதான் கேட்டேன்.

*அக்கிராசனர்:-* அது தனிப்பட்ட கேள்வி.

*ஆர். வீ.:—* நான் ஒரு தனித்த கேள்வி தான் கேட்கிறேன்.

*அக்கிராசனர்:—* தனிப்பட்ட கேள்விகள் முதலில் அளிக்கப்பட்ட பதிலை விளக்குவதற்கேயாகும். கனம் மெம்பர் அவர்கள் அநேக தனித்த கேள்விகள் கேட்கிறார்.

## சேலம் ஜில்லா போர்டும் சத்திரங்களும்.

சேலம் ஜில்லா போர்டின் மேற்பார்வையில் சுமார் 15 சத்திரங்களிருக்கின்றன. அவைகளில் ஒவ்வொரு சத்திரத்தையும் நான்கு சமமான ரூம்களாகத்தடுத்து அவைகளின் வாசற்காலுக்கு மேல் "பிராமணர்களுக்கு மாத்திரம்" "சூத்திரர்களுக்கு மாத்திரம்" "மகமதியர்களுக்கு மாத்திரம்"; "பறையர்களுக்கு மாத்திரம்" என்று கருங்கல்லில் செதுக்கிக் கட்டிடத்திலே புதைக்கப் பட்டிருக்கிறது. இது கலெக்டர்கள் பிரசிடெண்டுகளாகவும் அவர்களால் நியமன பெற்ற பார்ப்பன பிரபுக்கள் மெம்பர்களாகவு மிருந்த காலத்தில் நடத்தின விந்தை. ஷை சாஸ்வத கற்சாசனங்கள் செதுக்கிப் புதைத்த காலத்தில் க்ஷத்திரியர், வைசியர், லிங்காயத்துகள், விஸ்வ பிராமணர், தேவாங்கர், சௌராஷ்டிரர், கிறிஸ்தவர் முதலானவர்களெல்லாரும் சூத்திரர்களென்றே கருதினார்களோ அல்லது அவர்களுக்கெல்லாம் தங்குமிடம் வேண்டியதில்லையென்றே கருதினார்களோ என்பது நன்கு விளங்கவில்லை. பார்ப்பனர் கையில் அகப்பட்ட ஒரு ஸ்தல ஸ்தாபன ஆகூழியே இப்படிப்பட்ட சாஸ்வித சிலாசாசனம் பெற்றிருக்கிறதென்றால் நாம் வாதாடும் எகபோக சுயராஜ்ய நிர்வாகம் அவர்கள் கைக்கு வந்து விட்டாலால் நம்மனோர் கதி என்னாகுமென்பது உள்ளங்கை நெல்லிக்கனியே. சேலம் ஜில்லா போர்டு இந்த 20-வது நூற்றாண்டிலாவது கண் விழித்துப் பார்த்து 100-க்கு 97 பேருள்ள பார்ப்பனரல்லாதாருக்கு ஒரு ரூமும், 3-பேருள்ள பார்ப்பனர்களுக்கு மட்டும் ஒரு ரூமும் எற்படுத்தப்பட்டிருப்பதைக் கண்டித்து, எல்லா ரூமுகளுக்கும் முன்னால் புதைக்கப்பட்டிருக்கும் கற்சாசனங்களை உடனே அப்புறப்படுத்தி, சகல வகுப்பினரும் எல்லா ரூம்களிலும் எவ்வித வித்தியாசமுமின்றி சௌகரியம் போல தங்கலாமெனத் தீர்மானிக்கப்பட்டிருப்பதை அறிய அந்த போர்டின் முன்னேற்ற நோக்கத்தைக் குறித்து அதிகமாய்ப் பாராட்டுகிறேன்.

இப்போதாவது நம்மனோருக்கு இவ்வளவு மட்டில் தைரியமாய் வந்ததற்குக் காரணம் காலம் சென்ற டாக்டர் நாயரும், சர். பி. டி. செட்டியாரும் நாட்டின தென்னிந்திய நல உரிமை வித்தின் பலனென்றே சொல்லுவேன்.

மேற்கண்ட தீர்மானத்தை இதர ஜில்லா போர்டுகளும் தாலூகா போர்டுகளும் முனிசிபாலிட்டிகளும் பின்பற்றுமென நம்புகிறேன்.

சேலம் நண்பன்.

## கோயமுத்தூர் ஜில்லா போர்டு தேர்தல்களும் வேளாளர்களும்.

—:O:—

கோயமுத்தூர் ஜில்லா போர்டு பிரசிடெண்டு தேர்ந்தெடுத்தலின் முடிவையும் ஷை ஸ்தானத்திற்கு அபேட்சகராக நின்று தோல்வி அடைந்தவரின் வகுப்பைச் சேர்ந்த மெம்பர்களின் ஏராளமான தொகைகளையும் கவனித்தால் ஒருவிதமான ஆச்சரியமும், வியப்புமுண்டாகும்.

ஆனால், இந்த ஜில்லாவிலுள்ள வேளாளர்களைப் பொருத்தமட்டும் இந்த தேர்ந்தெடுத்தலின் முடிவானது அநேக கிளர்ச்சியை உண்டு பண்ணக் கூடியதாய் இருக்கிறது. இந்த ஜில்லாவில் பெரும்பான்மையோர் வேளாள குலத்தைச் சேர்ந்தவர்கள். மற்றும், தனவந்தர்களாகவும் ஈகை முதலிய குணங்களில் சிறந்தவர்களாகவும் இருக்கிறார்கள். ஆனால் மற்ற குலங்களெல்லாம் தத்தம் முன்னேற்றத்தைப் பற்றி வேண்டிய முயற்சிகள் செய்து கொண்டிருக்கும்போது இவர்கள் மாத்திரம் கட்சிப் பிரதிகட்சிகளிலும் மௌடீகத் தன்மையிலும், கல்வியறிவின்மையிலும் மூழ்கியிருப்பது மிகவும் வருத்தத்தை யுண்டுபண்ணுகிறது. நாகரீகம் அதிகரித்து வரும் இக்காலங்களிலுங் கூட தங்களுடைய அற்ப பொறாமைகளையும், குறுகிய நோக்கங்களையும், வினைதங்களையும் போக்கி ஒத்துழைத்து தங்கள் ஜாதி அபிமானத்தையும் அபிவிருத்தியையும் சிறிதேனும் கவனியாமல் ஆனந்த மௌடீகத்தில் காலங்கழிப்பது பரிதபிக்கத்தக்கதே. இன்னும், இக்குலத்தைச் சேர்ந்த கௌரவமும் அந்தஸ்தும் உடைய அங்கத்தினரின் நோக்கம் அதிக விந்தையாயிருக்கிறது. தங்களில் ஒருவரைபொறுப்பான ஸ்தானத்திற்கு கொண்டுவரக்கூடிய சமயமும் சக்தியும் இருந்தும் அவர்களுக்கு சிறிதேனும் ஊக்கமும், ஜாதி அபிமானமும் ஒற்றுமையுமில்லையென்பது நன்கு விளங்குகிறது. மற்றும் தங்களுக்குள்ளே உள்ள சிறிய மனஸ்தாபங்களைப் பெரிதாக நினைத்துக் கொண்டும், மனோபாவனையான சந்தேகங்களை உண்டு பண்ணிக்கொண்டும், மற்றவர்களின் சுவையான வார்த்தைகளினாலும் வாக்குத் தத்தங்களினாலும், தங்கள் நிலையை மறந்து நடந்து தங்களுக்கும் தங்கள் குலத்திற்கும் அபகீர்த்தியையும் அவமானத்தையும் உண்டாக்கினார்கள். தங்கள் பொறுப்பை மறந்து நடந்த காரியம் தங்களைத்தான் பற்றுமென்பதை நினைக்கவில்லை போலும். வோட் கொடுக்கிறோமென்று உறுதியாய்ச் சொல்லி, இறுதியில் இம்மாதிரி செய்வது ஏனோ விஷமம்! இப்படி இருக்க குலத்தாரை நம்பி தோல்வியடைந்த அபேட்சகருக்கு ஒருவிதமான அபகீர்த்தியுமில்லை யென்றே சொல்லலாம்.

ஆகையால் நமது குல முன்னேற்றத்திற்காக நான் ஒரு விண்ணப்பஞ்செய்து கொள்ளுகிறேன். மேலே கண்ட விஷயமானது நமது குலத்தின் கண்ணைத் திறக்குமென்று நம்புகிறேன். இனிமேலாவது நமது குலத்தினர் ஒற்றுமையாயிருந்து முன்னேற்றமடையக்கூடிய வழியைத் தேடுவாராக.

அ. பழனிசாமிக்கவுண்டர், பி. ஏ.,
கோயமுத்தூர்.

குறிப்பு:—

கோயமுத்தூர் ஜில்லா போர்டு பிரசிடெண்ட்டு தேர்தல்களைப்பற்றி அபேட்சகர்கள் நிருப்தியுடனிருந்த போதிலும் பலரால் பல கட்டுரைகள் நமக்கு பிரசுரிப்பதற்காக அனுப்பப்பட்டிருக்கின்றன. அவர்கள் பெரும்பாலும் ஒவ்வொன்றும் தெரிந்தெடுக்கப்பட்டவருக்கும் தெரிந்தெடுக்கப்படாதவருக்கும் இரு சார்பாரை ஆதரித்தவர்களுக்கும் மனம் புண்படும்படியாகவும் ஒருவருக்கொருவர் துவேஷத்தையும் வைராக்கியத்தையும் உண்டாக்கத் தக்க மாதிரியாகவும் இருப்பதாகக் காணப்படுவதால் நாம் அவைகளைப்பிரசுரிக்காததற்காக மன்னிக்க வேண்டுகிறோம்.

ஏனெனில் பார்ப்பனர்களின் கொடுமையிலிருந்தும் தப்ப பார்ப்பனரல்லாதாராகிய நாம் ஒற்றுமையோடும் உணர்ச்சியோடும் இது சமயம் செய்ய வேண்டிய வேலைகள் எவ்வளவோ இருக்க, எவ்வகையிலும் உயர்வு தாழ்வு இல்லாத சமூகத்தார் வெள்ளாளரென்றும் வெள்ளாள ரல்லாதவரென்றும் வெள்ளாளரில் பலவிதம் என்றும் ஒருவரையொருவர் புண்படுத்தத் தக்கமாதிரியான உணர்ச்சி மிகவும் அசம்பாவிதமானது.

தேர்தலில் நின்ற இருவர்களும் வேளாளர்களேயாவார்கள். இருவரை ஆதரித்தவர்களும் மிகுதியும் வேளாளர்களும் தக்க அந்தஸ்தும் கண்ணியமும் பொருந்தியவரேயாவார்கள். இப்படியிருக்க, இதுசமயத்தை ஆதாரமாகக் கொண்டு தங்கள் சுய நலத்திற்காக உண்மையிலேயே வித்தியாசம் உயர்வு தாழ்வு இல்லாத வகுப்புக்குள்ள வித்தியாசங்களிருப்பது போல் பேசவருவது நன்மைகளான காரியமல்ல வென்றே கருதுவோம். அல்லாமலும் இப்படியெல்லாம் நூல் பிடித்துக்கொண்டே போனால் ஒவ்வொரு தனி மனிதனும் ஒவ்வொரு வகுப்பாரதான் முடியும். அப்பொழுது அது பார்ப்பனரல்லாதாரின் சுயமரியாதையைத் தடைப்படுத்தும். ஆதலால் தனிப்பட்ட, சுயநலத்தை முன்னிட்டு அவ்வுணர்ச்சிகளை விட்டு விட்டு ஒத்துழைத்து பொது நலத்துக்கான காரியத்தில் கட்டுப்பாடாய் இறங்கவேண்டுமாய்க் கேட்டுக் கொள்ளுகிறோம். ப-ர்.


தங்க மெடல்களும், அநேக நற்சாக்ஷி பத்திரங்களும் பெற்ற
ராஜவைத்ய ஆஸ்ரமம்,
சாஸ்திரி விலாசம்
பிரஸ்பாக்கு எதிரில் செவ்வாய்ப்பேட்டை, சேலம்.
மேகரணங்கள், வெள்ளைவியாதி, ராஜப்பிளவை, கட்டிகள்,
நீடித்த மூல பவுத்திர வியாதிகளை ஆபரேஷன் இல்லாமல்
சௌக்கியம் செய்யப்படும், விபரத்திற்கு எழுதுங்கள்.
ஆயிரக்கணக்கான
மூல பவுத்ர வியாதி யஸ்தர்கள்
சௌக்கியமடைந்திருக்கிறார்கள்.



ஆயிரக் கணக்கான நற்சாக்ஷிப் பத்திரங்களும் தங்க மெடல்களும் பரிசுபெற்றது.
உலகப் பிரசித்திபெற்ற
மஹா சந்தனாதி தயிலம்.

இந்த தயிலமானது மூளைக்கும், கண்களுக்கும் குளிர்ச்சியைத் தரக்கூடிய அநேக பச்சிலை மூலிகைகள் சேர்ந்தது.

இத் தயிலத்தை வாரம் இருமுறை ஸ்நானம் செய்துவந்தால் கை, கால், கண் எரிச்சல், கண்ணில் நீர் வடிதல், கண் சிகப்பு, நித்திரையின்மை, தலைநோய் மண்டைக்குத்து, மூளைக்கொதிப்பு, காதில் வலி, சீழ் வருதல், பீனிசம் முதலிய பலவித நோய்களையும் குணப்படுத்தக்கூடியது.

இத்தயிலத்தை உபயோகித்த கனவான்கள் புகழ்ந்து எழுதும் கடிதங்கள் நாள்தோறும் வந்துகொண்டேயிருக்கிறது. இத்தயிலத்தை மேல்சொன்ன நோயுள்ளவர்களும், யாதொரு நோயுமில்லாத ஆண், பெண் யாவரும் உபயோகிக்கலாம். ஒரு முறை பரிக்ஷித்துப் பார்த்தால் உண்மை விளங்கும். பத்தியமில்லை.

24 அவு. பாட்டல் ரூ. 4—0—0
12 அவு. பாட்டல் ரூ. 2—2—0
வி. பி. தபாற்செலவு பிரத்தியேகம்.

---

சாலாமிசிரி லேகியம்.

சிறந்த தாதுபுஷ்டி மருந்து.

இந்த லேகியத்தை சில நாள் சாப்பிட்டு வந்தால் குறைவற்ற ஆண்தன்மை உண்டாவதுடன், கைகால் அசதி, இடுப்புவலி, பலஹீனம், நரம்புத்தளர்ச்சி, சொற்பனஸ்கலிதம், சம்போக காலத்தில் உண்டாகும் துரிதஸ்கலிதம் முதலிய கொடிய வியாதிகளை நீக்கி, ராஜகருவிகளுக்கு வலுவைக்கொடுத்து, தளர்ந்த நரம்புகளை கெட்டிப்படுத்தி, இரத்தத்தையும், வீரியத்தையும் விருத்தி செய்து நல்ல திடகாத்திர சரீரத்தை உண்டாக்கும். பத்தியமில்லை.

ஒரு சேர் டப்பி விலை ரூ. 2—8—0
வி. பி. தபாற்செலவு ரூ. 0—8—0

விலாசம் தெரிவிப்பவர்களுக்கு பலவிதமான மருந்துகள் விபரம் அடங்கிய கேட்லாக் இனாமாக அனுப்பப்படும்.

டி. சி. சிங்காரம் அண் கோ.,
சித்த ஆயுர்வேத ஔஷதசாலை,
தெப்பக்குளம் போஸ்டு திருச்சினாப்பள்ளி.


தவறிவிட்டது:—

இவ்விதழில் 5-ம் பக்கம் 3-ம் கலத்தில் வெளியாகியுள்ள "ஆநந்த கதா கல்பம்" என்ற விளம்பரத்தின் விலாசத்தை குறிப்பிடத் தவறி விட்டது. அதன் விலாசம் பின் வருமாறு. "பிரஜானுகூலன்"

ஸ்ரீரங்கவிலாசம்,
மேல அடைய விளைந்தான் வீதி,
ஸ்ரீரங்கம்.

சற்குருவே துணை.

# ஸ்ரீ நமசிவாயகுரு தமிழ்சித்த ஆயுள் வேத வைத்தியசாலை, கோயமுத்தூர்.

இக் கோயமுத்தூரிலும் சென்னை முதலான விடங்களிலும் தீராதெனக் கைவிடப் பட்ட கொடிய வியாதிகளை வெகுசீக்கிரத்தில் சவுக்கியம் செய்து அநேக நற்சாக்ஷிப் பத்திரங்களும் பரிசுகளும் மெடல் சங்கிலி முதலியவை பெற்றவரும் ஸ்ரீ நமசிவாய குரு தமிழ் சித்த ஆயுள் வேத வைத்திய சாலை அதிபருமாகிய கோ. ந. முருகையா பண்டிதர் அவர்களால் தயார் செய்யப்பட்டு உலக பிரசித்தி அடைந்து வரும் ஔஷதங்கள்.

## மேக ராஜாங்க மதன விந்தாதி லேகியம்.



மேலேகண்ட மேகராஜாங்க மதன விந்தாதி லேகியத்தை காலை மாலை இரு வேளையாக ஒரு மண்டலம் சாப்பிட்டு வருவதினால், 20 வகை மேகத்தை போக்கி திரேகத்தை பசும் பொன் போல் செய்வது மன்றி, சிலேற்பனம் 96ம் கிரந்தி, அரையாப்பு, சூலை, க்ஷயம், ஈளை இருமல், மந்தாரகாசம், காமாலை, சோகை, பாண்டு, குன்மம் 8-ம் கிரிச்சனங்கள் 6-ம் வாய்வு 26ம் பித்தம் 40-ம் இலிங்க புற்று, ஸ்திரிகளுக்கு யோனி புற்று, வெள்ளை, மஞ்சள் வெள்ளை, பிர மேகம் சொறி கறப்பான், மேக ஊறல், தண்டில் புண், கண்ட மாலை, மகோதிரம், நீராமை, கவுசி, உளமாந்தை, அஸ்திஜுரம் அஸ்திவெட்டை, உஷ்ண வாய்வு அரோசகம், அன்னத்துவேசம் வாந்தி, விக்கல், கால்கை எரிவு, பெரும்பாடு, எலும்பு புருக்கி நோய், மூல வாயுவு, மூலத்தில் ரத்தம், கிரு கிருப்பு மயக்கம், நித்திரை, ஸ்திரிகளுக்கு கெற்ப நோய் 7ம் ஸ்திரிகள் மலடியாயிருந்தால் கெற்பம், நீரடைப்பு, சதையடைப்பு, துர்மாங்கிச அடைப்பு, சீதக்கடுப்பு, முதலான கொடிய ரோகங்களை சுகப்படுத்தி தேகம் சிவந்து மின்னும் இந்திரியம் இருகி கட்டும் இதை வயோதியர்கள் சாப்பிட்டு வருவார்களானால் ஜீவாதாரநரம்புகள் முருக்கேறி தாது விர்த்தியையும் ஆண்மையையும் உற்சாகத்தையும் தேகாரோக்கியத்தையும் ஆனந்த சுகத்தையும் கொடுப்பதில் இதற்கு நிகரான லேகியம் வேறேயில்லை யென்று உறுதியாய் கூறுகிறேன். ஆண் பெண் யாவர்களும் சாப்பிடலாம் ஒரு தரம் வாங்கி அநுபவிப்பீர்களானால் இதன் உண்மை நன்கு விளங்கும். பத்தியமில்லை.

48-நாள் சாப்பிடக்கூடிய லேகியம் சேர் 1-க்கு விலை 5-0-0

24-நாள் „ சேர் ½-க்கு விலை 2-8-0

12-நாள் „ சேர் ¼-க்கு விலை 1-4-0

வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

## குணத்திற் சிறந்தது! விலை குறைந்தது!! பரிமளமிகுந்தது!!!

## சர்வ மேகங்களுக்கும் மகா ராஜாங்க சுகந்த பரிமளாதி ஸ்நானத்தைலம்

மேலே கண்ட சுகந்த பரிமளாதி ஸ்நானத் தைலத்தை ஆண் பெண் யாவரும் ஸ்நானம் செய்து வருவதாலும் நித்தியம் தலையில் தடவி தலைவாரி வருவதினாலும் தீரும் வியாதிகள், மேகம், நீரெரிவு, நீர் எரிச்சல், கிரிச்சனம், க்ஷயரோகம், கண்ணெரிவு, கண் புகைச்சல், கைகாலெரிவு, பிரமேகம், ரொணம், கிரந்தி கற்றாழை நாத்தம், அஸ்திஜுரம், அஸ்தி வெட்டை, உள் வெட்டை, தாது நஷ்டம் பித்தத்தாலுண்டாகும் மயக்கம் புண் புரை முதலானவைகளும் குழந்தைகள் முதல் ஆண் பெண் யாவர்களும் தலைக்கு பத மிட்டு வாரி வந்தால், தலையில் மேகத்தினாலுண்டாகும் பொடு அதினால் சகிக்க முடியாத அரிப்புண்டாகி கோதுமை தவிடுபோல் உதிருகின்றதும் மாறிப்போகும். இந்த தைலமானது எங்கள் முன்னோர்களால் கையாண்டு வந்ததும் என் அநுபவத்துக்கு வந்து ஆயிரக்கணக்கான ரோகிகளுக்கு சகல வியாதிகளையும் சவுக்கியப்படுத்தி இருக்கிறேன். மேற்படி சுகந்த பரிமளாதி ஸ்நான தைலமானது யாதொரு நோய் வராமல் பாது காப்பதோடு ராஜ கருவியாகிய மூளைக்கு குளிர்ச்சியையும் கண்களுக்கு பூரண சந்திரன் போன்ற குளிர்ந்த பிரகாசத்தையும் திவ்விய தேஜஸ்ஸையும் ஞாபக சக்தியையும் உற்சாகத்தையும் தேகாரோக்கியத்தையும் கொடுக்குமென்பதில் சந்தேகமில்லை. பத்தியமில்லை.

☞ 24-அவுன்ஸ் கொண்ட சீசா 1-க்கு விலை 5—0—0 ☞ 12-அவுன்ஸ் கொண்ட சீசா 1-க்கு விலை 2—8—0

☞ 6-அவுன்ஸ் கொண்ட சீசா 1-க்கு விலை 1—4—0 வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

## வசந்த குஸுமாகர கஸ்தூரி வாய்வு குளிகை.

மேலேகண்ட கஸ்தூரி வாய்வு குளிகையானது தங்கம், வெள்ளி, முத்து, பவளம் தாம்பிரம் முதலாகியவைகளாலும் உயர்ந்த சரக்குகளாலும் பெரும்பாலும் சாஸ்திர ரீதியாய் மிக்க பிரையாசையுடன் யாவரும் எளிதிலடையும்படி சித்தம் செய்யப்பட்ட இந்த கஸ்தூரி வாய்வு குளிகையை உபயோகித்து வருவதினால் உஷ்ணத்தினாலுண்டாகும் வாய்வு, மாரடைப்பு, இடுப்புவலி, வயற்றுப்பிசம், நீர்கட்டு, பெண்களுக்கு கெற்பபையிலுமுள்ள ரணம், அதனால் சீழுண்டாகி வயற்றில் குத்தல். வெள்ளை விழுதல், சகிக்க முடியாத வயற்றுவலி, இவ்வித வியாதிகளுக்கு இங்லீஷ் வைத்தியர்கள் வயிற்றை ஆப்பிரேஷன் செய்து பார்க்காமல் நிவர்த்தி செய்ய முடியாதென்று முடிவு சொன்ன வியாதிகளை அநேகர்களுக்கு எங்களுடைய வசந்த குஸுமாகர கஸ்தூரி வாய்வு குளிகையினால் நாலு ஐந்து வேளையில் பூரண சொஸ்தப்படுத்தி அதனால் பரிசுகளும் மெடல்களும் சங்கிலி முதலானதும் பெற்றிருக்கிறேன்.

மேல்கண்ட வசந்த குஸுமாகர கஸ்தூரி வாய்வு குளிகை அற்புத குண முடையன என்பதிற் சற்றும் சந்தேகமில்லை.

☞ 12-மாத்திரை கொண்ட சீசா 1-க்கு விலை 1—4—0 வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

உபயோகப்படுத்தும் விபரம் மருந்துடன் அனுப்பப்படும்.

☞ ஏஜண்டுகள் தேவை தகுந்த கமிஷன் கொடுக்கப்படும்.

மருந்து கிடைக்குமிடம்:—

பழனிவேல் பிள்ளை,

சோல் ஏஜண்டு, பெரிய கடை வீதி, கோயமுத்தூர்.

ரோஜா முத்தையா
ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

கணக்கில்லா நற்சாக்ஷிப் பத்திரம் பெற்றது.

## அயன் மஹா மூலிகை சந்தனாதி தைலம்.

சிரசைப் பற்றிய நோய்களுக்கு தேவாமிர்தம் போன்றது.

உஷ்ணமான வேலைக்காரர்களுக்கும் உஷ்ணதிரேகி, மாணுக்கர், வக்கீல், ஜட்ஜுகள் முதலியோர் பலரும் உபயோகித்து வருகின்றனர்.

பரிமள மணமும் சிறந்த குண முடையது. பத்தியமில்லை.

கண்எரிவு, கண் சிகப்பு, கண் கூச்சம், கண்ணில் நீர் வடிதல், பார்வைக் குறைவு, பித்த மயக்கம், பயித்தியம், ஞாபகக் குறைவு, அஸ்திகாங்கை, மூலச்சூடு, நீர் எரிவு, நீர்க் கடுப்பு, தாகம், நித்திரை பங்கம், பூச்சி வெட்டு, வழுக்கை, மண்டைக் குத்தல், ஒருத்தலைவலி, தலைச்சொறி, காதுவலி, காதுகுத்தல், மயிர்ப் பிளவு, மயிர் உதிர்தல் செம்பட்டை, ஆரம்ப நரை, தேகநாற்றம், முதலிய வியாதிகளைப்




போக்கி உரோமத்தை கருக்கச் செய்யும் திறமை வாய்ந்த தைலம் இது ஒன்றே.

12-அவுன்ஸ் பாட்டில் 1-க்கு விலை ரூ. 1-8-0

24-அவுன்ஸ் பாட்டில் 1-க்கு விலை ரூ. 3-0-0

வாரம் இரு முறை எண்ணெய் ஸ்நானத்திற்குப் பதிலாக உபயோகிப்பதுடன் அனுதினமும் தலைவாரிக் கொள்ளலாம்.

| | |
|---|---|
| 40 வகை பித்தத்திற்கும் ஜீரக ரசாயனம் 2-சேர் | ரூ. 2—0—0 |
| இரத்த விருத்திக்கு வீரிய தாது லேகியம் 1-சேர் | ரூ. 2—0—0 |
| பாலர் ரக்ஷணி நான்கு வகை மாத்திரை 200-க்கு | ரூ. 2—0—0 |
| சுக பேதி மாத்திரை அல்லது இரா பேதி 100 மாத்திரை | ரூ. 1—0—0 |
| சுக பேதி பவுடர் 100 வேளைக்கு | ரூ. 1—0—0 |
| ஓம சத்து அரை அவுன்ஸ் புட்டி 1-க்கு | ரூ. 1—0—0 |
| காலரா சஞ்சீவி திராவகம் 1-அவுன்ஸ் புட்டி 1க்கு | ரூ. 2—0—0 |
| காது நோய்க்கு கர்ண பிந்து 1-அவுன்ஸ் புட்டி 1-க்கு | ரூ. 1—0—0 |
| சோகை பாண்டுகளுக்கு அய காந்த சத்து 40 வேளைக்கு | ரூ. 1—0—0 |

குறிப்பு:— இன்னும் எல்லா வியாதிகளுக்கும் கை கண்ட மருந்துகள் நேரிலாவது தபால் மூலமாவது பெற்றுக் கொள்ளலாம். எனது தருமவைத்திய சாலையில் இவ் வருடம் 15000 வியாதியஸ்தர்களுக்கு மருந்து கொடுத்து சகல வியாதிகளையும் குணப்படுத்தி இருக்கிறேன். திருச்சியிலே பிரபல தன வந்தர்களின் குடும்பங்களுக்கு குடும்ப வைத்தியராக இருந்து வருகிறேன்.

டாக்டர். ஜி. எல். சாமி,

சத்திய வேத வைத்தியசாலை, வரகநேரி—திருச்சினுப்பள்ளி.



## ஆனந்த குணபோதினி

ஒரு நூதன உயர்தர தமிழ் மாதப் பத்திரிகை

பிரசித்த அநுபவஞான சாஸ்திரி இதன் ஆசிரியராய் விளங்குகிறார்.

இத்தகைய நவீன ஸஞ்சிகை இதுவரை வெளிவந்ததில்லை. இது தமிழ் அறிந்த ஒவ்வொருவர் அகத்துள்ளும் புகுந்து நிலவும் உன்னதம் வாய்ந்தது. சித்திரப்படங்களுடன் திகழ்வது. கல்விச் செல்வம், பொட்செல்வம் பெருகி இன்பம் ஓங்குதற்குரிய வியாசங்களால் ஒளிர்வது. அறிவை விளக்கி உற்சாகத்தைக் கொடுப்பது. நன்னடக்கையும், லௌகிக யுக்தியும், பாஷை ஞானமும், தேசாபிமானமும், ஈசுவர பக்தியும், ஆழ்ந்த யோசனையையும் உண்டாக்கக் கூடியது. எல்லா மதஸ்தர்களுக்கும், எல்லா ஜாதியார்களுக்கும் ஏற்றதாய் நல்ல விஷயங்கள் இருக்கப் பெற்றது. சொல் நயம் மிகுந்து தமிழ் உலகமெல்லாம் ஜொலிக்கும் படியாயிருப்பது "ஆனந்த குணபோதினி" தான். ஆடவர், மகளிர், பெரியோர், சிறியோர், எவர் கையிலும் இப்பத்திரிகையை இனிக் காணலாம்.

இதில் "ஆனந்த தரிசனம்" "பழமொழிக் குறிப்புகள்" "பத்திரிகா சாரம்" "பெண்கள் பக்கம்" "பிரபஞ்ச தரிசனம்" "விகடப் பிரதாபன்" "சென்ற மாதம்" என்ற தலைப் பெயர்களின் கீழ்வரும் ஒவ்வொரு விஷயங்களும் சிந்தைக் கினிய செவிக்கினிய வாய்க்கினிய அலங்கார வசனமழையாய் விளங்கும். இப்பத்திரிகையே எவ்விஷயத்திலும் மிகு சிறந்ததென்பதை தங்களுடைய அநுபவத்தில் தாங்களே அறிந்து கொள்ளலாம். ஆனந்த குணபோதினியின் சொற்ப சந்தாவை உற்று நோக்குங்கள். வருஷச் சந்தா ரூபாய் ஒன்றே (ரூ-1) இன்றே எழுதுங்கள், உடனே சேருங்கள்.

தி இராஜகோபால் முதலியார்,

புரோப்ரைட்டர், "ஆனந்த குணபோதினி" ஆபீஸ்,

302, தங்கசாலைவீதி, சென்னை.



## இந்தியர் கஷ்டநிவாரண பாங்கு "லிமிடெட்" கோயமுத்தூர்

| | |
|---|---|
| காப்பு திரவியம் | —ரூ. 2,706. |
| மூல திரவியம் — | ரூ. 5,00,000. |
| வெளிவிடப்பட்டது | —ரூ. 69,100, |
| வசூலிக்கப்பட்டது | —ரூ. 43,890. |
| டிபாசிட்டுகள் | ரூ. 62,580-1-0. |

டிபாசிட்டுகள் அடியிற்கண்ட வட்டி வீதத்திற்கு பெற்றுக்கொள்ளப்படும்.

சேவிங்ஸ் பிக்செட் டிபாசிட்டு

இரண்டு வருஷ, கெடுவு வட்டி.

100-க்கு மாதம் 1-க்கு ரூ. 0—10—0

வருஷம் 1-க்கு வட்டி ரூ. 7—8—0

இதற்கு பிரதி மாதமும் வட்டி கொடுக்கப்படும்.

பிக்செட் டிபாசிட்டு.

ஒரு வருஷ கெடுவு, வட்டி.

100-க்கு மாதம் 1-க்கு ரூ. 0—9—0

வருஷம் 1-க்கு வட்டி ரூ. 6—12—0

இதற்கு வட்டி 6-மாதங்களுக்கொருமுறையாவதும் வருஷத்திற் கொருமுறையாவதும் கொடுக்கப்படும்.

டி பாங்கானது ஆரம்பிக்கப்பட்டு ஒரு வருஷ காலமாக ஒழுங்காக நடந்து வருகிறது. அனது 10-2-26-ல் வருஷாந்திரக் கூட்டமும் நடைபெற்றது. இப்பாங்கானது கோயமுத்தூரில் உள்ள இம்பீரியல் பாங்கை தவிர்த்து மற்ற பாங்குகளைப்போல் 100-க்கு நாள் 1-க்கு ஒரு அணவும், அதற்கும் அதிகமாகவும், அதிகவட்டி வாங்காமலும், புதிய விதிகளுடனும் குறைந்த வட்டிக்கு (அதாவது 100-க்கு, 0—12—0. 1—0—0) ரூபாயிக்கு எவ்வகையிலும் அதிகப்படாமல் ஏழை ஜனங்களுக்கு அநேக சௌகர்யமாகவும் இருப்பதோடு, குறைந்த பங்குகள் ஆலேயும் மானேஜிங் டைரெக்டர், அவர்களுடைய திறமையினுலும், முயர்ச்சியினுலும், பங்குக்காரர்களுக்கு முதல் வயதிலேயே 100-க்கு ஒரு ரூபாய் வட்டி கொடுக்கப்பட்டிருப்பதுவும் தவிர ரிசர்வு பண்டு ரூபாய் 2,706 சேர்ந்திருக்கிறது. நாளதுவரை யாதொரு போக்குக்குத்தியில்லாமலும் இருப்பதி லிருந்து மானேஜிங் டைரெக்டருடைய தீர்க்காலோசனையும், பாங்கின் நல்ல ஸ்திதியையும் காட்டுகிறது. மேலும் அதிகமான பங்குகள் சேர்ந்து ஏராளமான லேவாதேவி நடந்தால் இப்போது கிடைத்த இலாபத்தைவிட அதிக இலாபம் கிடைக்குமென்றும், ஏழைகளுக்கும் பெரிய உபகாரமாக இருப்பதற்கும் கடவுள் கிருபை செய்வாராக.

சுபம்! சுபம்!! சுபம்!!!

குறிப்பு:—

இந்த பாங்குக்கு ஏற்பட்டிருக்கும் டைரக்டர்கள் ஒவ்வொருவரும் தனித்தனி சொந்த பாங்கு நடத்தக்கூடிய சக்தி வாய்ந்த பெரிய பெரிய தனவந்தர்களாகவும், அமையப் பெற்றிருப்பதால் யாவரும் தங்களிடமுள்ள திரவியத்தை டிபாவிட்டாகவும் பங்குத் தொகைக்காகவும் இப்பாங்குக்கு அனுப்பி உங்களுடைய பணத்திற்கு யாதொரு நஷ்டமின்றி வட்டியுடன் பெற்றுக்கொள்வதோடு, உங்களுடைய திரவிய சகாயத்திலும், ஏழைகளுக்கும் சகாயம் செய்த பாக்கியமும் அடைவீர்கள் என்பதற்கு யாதொரு தடையுமில்லை.

ஜி.ராமச்சந்திர செட்டி,

31—5—26. மானேஜிங் டைரக்டர்

## மின்சார ரசம்.

### எல்லா வியாதிகளுக்கும் தேவாமிர்தம் போன்றது.

**மின்சார ரசத்தின் குணம் எப்படி?**

இது ஒரு அபூர்வமான சஞ்சீவி. இதற்கு இயற்கைய கவே ஒரு வித மின்சார சக்தியுண்டு. எந்த வியாதிக்கும் துளிகள் கணக்கில் உபயோகித்து நிமிஷக் கணக்கில் குணமடையலாம். பாஷாண சம்பந்தமான சரக்குகள் இதில்கிடையாது.

**மின்சார ரசத்தின் விசேஷமென்ன?**

மனிதர்களுக்கு வரும் எல்லா வியாதிகளையும் இந்த ஒரே மருந்து வெகு ஆச்சரியகரமாக குணப்படுத்துகிறது. உள்ளுக்கும் மேலுக்கும் இந்த ஒரே மருந்தை உபயோகிக்கலாம். எந்த விதமான அநுபானமுமில்லை. எவ்வித பத்தியமுமில்லை. பாலர் முதல் விருத்தாப்பியர் வரையில் ஸ்திரீகள் உள்பட எல்லோரும் எக்காலத்திலும்பயமின்றி உபயோகிக்கலாம்.

**மின்சார ரசத்தின் அனுபோகம் எப்படி?**

கை கண்ட மருந்து. ஆயிரக்கணக்கான ஜனங்கள் இதை தினந்தோறும் இந்தியாவிலும் வெளி நாடுகளிலும் உபயோகித்து வருவதே இதற்கு போதுமான சாக்ஷியாகும். வாங்கினவர்களே பலமுறை ஆர்டர் தருகிறார்கள்.

ஒரே முறை பரீக்ஷியுங்கள்! அநேக நற்சாக்ஷிப் பத்திரங்கள் அடங்கிய எங்கள் புது கேட்லாக் வேண்டுபவர்களுக்கு இனமாக அனுப்பப்படும். இன்றைக்கே எழுதுங்கள்.

**ஒரு புட்டியின் விலை ரூ. 2. தபால் செலவு வேறு.**

## மின்சார ரசம் கம்பெனி லிமிடெட், சேலம். (S. I.)

தந்தி விலாசம்:—'Rasamco', Salem.

---

இங்கிலீஷ் படிக்க அவலுடன் எதிர்பார்த்திருந்த அன்பர்களே! என் நீங்கள் கவலைப்படுகிறீர்கள்!!

23000 ஜனங்களுக்கு ஆங்கிலம் விரைவில் கற்றுகொடுத்தது

7-ம் பதிப்பு] இப்புத்தகம் ஒன்றேதான்!!! [7-ம் பதிப்பு

7000-பக்கங்கள் கொண்ட முழு கலிகோ பயிண்டு புத்தகம் விலை ரூ. 2. ஸ்ரீராமர் சீதா திருக்கலியாண படமும், பட்டாபிஷேக ஆட்டோன் படமும் உள்ளது

## "ஆங்கில ஆசான் அல்லது போதினி"

எமது ரிஜிஸ்டர்ட் "லேடி டிரேட் மார்க்கு" போட்டிருக்கும் புஸ்தகம் பார்த்து வாங்குங்கள்!

மோசம் போகாதீர்கள்.



தமிழ் தெரிந்தவர்கள் ஆங்கில பாஷையை ஆசிரியர் இல்லாமலே அதி சீக்கிரத்தில் பணச் செலவின்றி சுயமாகவும், சுலபமாகவும் கற்றுக்கொள்ளலாம். உலக அநுபவத்திற்கு வேண்டிய பல விவகாரங்களின் பதங்களைப் படிப்படியாக நூதன பாட முறைகளுடன் வெளியிடப்பட்டிருக்கிறது. கிராம முன்சிப், கர்ணம், கான்ஸ்டேபில்கள், கங்காணியர்கள், பட்லர்கள் முதலிய எல்லா தொழிலாளர்களுக்கும் மிகவும் முக்கியமானது.

23000-காப்பிகள் இது வரையில் செலவாகியிருப்பதே இதன் பெருமையையும் இன்றியமையா உபயோகத்தையும் விளக்கிக்காட்டும். எல்லா ஊரிலும் எல்லா புத்தக ஷாப்பிலும் கிடைக்கும். எல்லா இடங்களிலும் ஏஜண்டுகள் தேவை.

**தி. இராஜகோபால் முதலியார்,**
302, தங்கசாலைத் தெரு, மதராஸ்.

---

பண்டித எஸ். எஸ். ஆனந்தரின்

## மஹா சந்தனாதித் தைலம்

தைலங்களுக்கெல்லாம் தலைமையானது!
வெயில் காலத்திற்கு மிகப்பயனுள்ளது!!

இம் மகா சந்தனாதித் தைலத்தை அரசர்களும் ஆங்கில மருத்துவர்களும், ஐக்கோர்ட் ஜட்ஜிகளும், வக்கீல்களும், கல்வி கற்கும் மாணவர்களும் ஆண்டு அநுபவித்து நற்குணங்களைப் புகழ்ந்து கூறியிருக்கிறார்கள். அவைகளை நமது மருந்து விலைப்பட்டியின் நன்மதிப் பிதழில் காணலாம்.

24-அவுன்ஸ் புட்டி 1-க்கு ரூ. 4—4—0
12-அவுன்ஸ் 2-4-0. 6-அவுன்ஸ் 1-3-0

தமிழ் மருத்துவ சாலை,
220 தங்கசாலைத் தெரு, சென்னை

---

இனம்! இனம்!!

## ரகஸ்ய ரத்னம்

அல்லது

வாழ்க்கை நலம் புகட்டும் நூல்.

வைத்திய அனுபவங்கள், வாழ்வின் மர்மங்கள், இரகசியக் குறிப்புக்கள், விவாகமானோர் அறிய வேண்டிய விஷயங்கள், பெண்களின் சம்பந்தமான பலவகை விவரங்கள் இல்லற சார சங்கிரகம் ஆகிய பலவும் அடங்கியது.

விலை இல்லை; தபால் செலவு இல்லை. விலாசம் தெரிவித்தால் மறு தபாலில் அனுப்பி வைக்கிறோம்.

அமிர்தம் அண்டு கோ.,
தபால் பெட்டி 222, மதராஸ்.


கோயமுத்தூர் ஸ்டார் பிரஸ் (லிமிடெட) ஈரோடு பிராஞ்சு பிரசில அச்சிடப்பெற்று சா. இராமசாமி நாயக்கரால் வெளியிடப்பட்டது